ANBIAN'S

JEEVATMIGAN.

OR

WHAT INDIA NEEDS?

ஜீவாத்மீகன்

அல்லது

இந்தியாவிற்கு தேவை என்ன?

By

புரோபஸர் **A. J.** அன்பையன், **F. B. P. I.,**

(பிரிட்டிஷ் மனோதர்ம ஸ்தாபனத்தின்

இந்திய பிரதிநிதி.)

...பீஸ், நாசரேத்.

8 NOV 193

R
N30
186828

புரொபஸர் அன்பையன் எழுதின இதர புஸ்தகங்கள்.

1. மிஷனெரி உலகம்.
2. எனது வாழ்க்கையின் கதை.
3. நாடார்களும் கவர்ன்மெண்டும்.
4. டாக்டர் ஜான்சன்.
5. ஸ்பெஷல், ஜூனியர் சீனியர் கோர்ஸ்கள்.
6. புது வாழ்க்கை ஜீவரஹஸ்யம்.

ANBIAN'S
JEEVATMIGAN.
OR
WHAT INDIA NEEDS?

ஜீவாத்மீகன்

அல்லது

இந்தியாவிற்கு தேவை என்ன?

8-NOV 1930

By

புரோபஸர் **A. J.** அன்பையன், **F. B. P. I.**,

(பிரிட்டிஷ் மனோதர்ம ஸ்தாபனத்தின்

இந்திய பிரதிநிதி.)

தென் இந்தியா அச்சாபீஸ், நாசரேத்.

Copy Right 1930.

To my Country men.

பொருளடக்கங்கள்.

		பக்கங்கள்.
1.	ஜீவாத்மீகம்	16
2.	கல்வி	23
3.	தேசாபிமானம்.	31
4.	அரசியல்.	39
5.	பிராமணர்கள்.	44
6.	பிராமணரல்லாதார்	50
7.	முகம்மதியர்.	55
8.	கிறிஸ்தவர்	61
9.	விபசாயம்.	67
10.	கைத்தொழில்.	71
11.	வியாபாரம்.	75
12.	முடிவு.	79

முகவுரை

1 நம் தாய்நாடாகிய இந்திய தேசமானது இவ்விருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து ஒருவாறு விழித்துக் கொண்டிருப்பதாகத் தெரிய வரும். பத்திரிகைகளும், மகாநாடுகளின் கூட்டங்களும், ஆங்காங்கே உண்மை தேசாபிமானிகளின் பிரச்சாரங்களுமே இந்த விழிப்புக்குக் காரணம். அது உண்மையே.

2 இவ்வளவு தேசமுன்னேற்றத்திற்கான முயற்சிகள் பலநாட்டில்நடந்தும், அநேகமக்கள் தேசத்தின் நிலைமையைப்பற்றி ஒன்றுமே தெரியாமலிருந்துவருகின்றனர். அவர்கள் "ஆண்டவன் நம்மை இப்படியே வைத்திருக்கிறார். சுகமாய் இருப்பதற்கு பெற்றோர் பொருள்தேடி வைத்துவிட்டுப் போகவில்லை. இளமையில் கல்விசரிவரக்கற்காமல் போய்விட்டோம், இனிஒருவயிற்றுக்கஞ்சி கிடைத்தால் போதும். யார் தேசத்தை ஆண்டாலென்ன? நமக்குயார் எதைக் கொடுத்து விடப்போகிறார்கள்" என்று கவலையாய்ப் பேசுகிறார்கள். குடியானவர்கள், கைத்தொழில் செய்பவர்கள், வியாபாரிகள் முதலானோர் இப்படிப் பேசும் கூட்டத்தில் சேர்ந்தவர்களே யாவர்.

3 கிராம உத்தியோகஸ்தர்கள் எலிமெண்டரி பாடசாலை உபாத்திமார்களில்சிலர் "நான்கடந்த 15 வருஷகாலமாய்த் தரித்திரத்தை ருசிபார்த்து வருகிறேன். எனக்கு வயது 42. சம்பளம் ரூ18/- குடும்ப நிர்வாகஞ் செய்யமார்க்கமில்லை" என்றும், சில குமஸ்

தாக்கள் "35 ரூ சம்பளம் பெற்று 8 பேர்களைக் காப் பாற்ற வேண்டியதாயிருக்கிறது." சிலர் "ஒற்றுமை யாமை இயக்கத்தினால் கல்வியை இழந்தேன்" சிலர் "மிஷனெரிமார்களால் அடிமைப்பட்டு, ஏமாற்றப்பட்டு வேலையை விட்டேன்" சிலர் "நிலத்திலிருந்து என்ன கிடைக்கிறது. செலவுக்கும், வரிக்கும்சரியாகத்தானிரு க்கிறது" சிலர் "நான் சம்பாதித்த பணத்தைஎல்லாம் கள், சாராயக்கடைகளில் தொலைத்திருக்கிறேன்" வே றுசிலர் "15 ஆயிரம் வரை செலவு செய்து ஹைகோ ர்டுவரைபோய் பார்த்துவிட்டு உட்கார்ந்திருக்கிறேன். நமக்கு படித்து வந்தவர்களால் என்ன உதவிகிடைக் கிறது" என்று பலர் பலவாறு சொல்லுகிறார்கள்.

4 இவைகளையும் இன்னும் அநேக காரியங்க ளையும் உற்றுக்கவனிக்கும்போது, நாட்டின் அறிவி னத்தைக் கண்டு நாம் வருந்துவதா? ஜனங்களுக்காக உண்மையில் பாடுபடுகிறோமென்று சொல்லுகிறவர்க ளைக்கண்டுவருந்துவதா? ஆங்கில அரசாட்சியை நினை த்துவருந்துவதா? அல்லது அது நாட்டிற்கு கொடுத் திருக்கும் கல்வியின் விரோதத்தை நினைத்து வருந்து வதா? அக்கல்வியை பெற்று பெரிய உத்தியோகத் திலிருந்து கொண்டு நாட்டின் முன்னேற்றத்தைக் கொஞ்சமேனும் கருதாமலிருந்துவரும் நம் சில சகோதரர்களைக் கண்டு வருந்துவதா? தேசியகட்சி யையும் அதன் தலைவர்களின் ஒற்றுமையின்மை யையுங்கண்டு வருந்துவதா? கைத்தொழில் இன்னும் நாட்டில் சரிவர விர்த்தியாகவில்லையே என்று வருந்துவதா? ஜனத்தொகை வரவர விர்த்தியாகிறதே

என்பதைக் கண்டு வருந்துவதா? யாதொரு கவலை யின்றி கோவில் குளங்களுக்குக் கும்பல் கும்பலாய் யாத்திரை மார்க்கம் போகிறவர்களைக் கண்டுவருந் துவதா? நாட்டின் தரித்திரம் எப்பொழுது மாறும் என்று கவலைப்படுவதா? தேசத்திலிருக்கும் பல் வேறு பிரிவுகளைக் கண்டு வருந்துவதா? இந்தியநாட் டில் சுகமாய்க் காலந்தள்ளிவிட்டு மேநாடுகளுக்குப் போகுபபோது குறைகூறிப் போகிறவர்களைக்கண்டு வருந்துவதா? என்று யோசிக்குங்கால் சுயஅறிவு உலக அறிவைக் கொடுக்கும் கல்வியே, நம் நாட்டிற்கு தேவை யென்றும், இப்பாதிரியான கல்வி யிருந்தால் நாடு முன்னேறுமென்றும் காட்டுவதற்கே நாம் இச்சிறு நூலை எழுத ஆரம்பித்தோம்.

5 இந்நூதனக் கல்வி இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளில் விசேஷமாய் அபிவிர்த்தி செய்யப்படுகின் றது. அதன் காரணம்பற்றியே அந்நாடுகள் முன்னேறி வருகின்றன. அத்தேசங்களில் பெரிய சர்வகலாசாலைப் பட்டங்கள் பெற்றவர்களைவிட சுயமுயற்சியினால் ஜீவா த்மீக விதிகளையும், கைத்தொழில், விபசாயம்முதலிய சாஸ்திரங்களையும் நன்கு படித்தவர்கள் நாட்டிற்கு அரியதொண்டு புரிந்திருக்கிறதாகத் தெரிகிறது.

6 மேலும் அத்தேசதனவந்தர்கள் சுயஅறிவு பொது அறிவைக்கொடுக்கும் கல்விக்காக ஏராள மான திரவியத்தை நன்கொடையாகக் கொடுத்து உதவி செய்கிறதாகவுந் தெரிகிறது. நம் நாட்டில் கோவில்களில் தானங்கள் வழங்குவதற்கும், சோம் பேறிமடங்களுக்கு செலவுசெய்வதற்கும் லட்சக்கணக்

காகக்கொடுக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் அபிமானிகள் நன்கொடை அளித்திருக்கிறார்கள் அதைப்போற்றுகிறோம். ஆனால் மேநாடுகளிலிருப்பது போல் அவ்வளவு சகஜமாயில்லையென்றே சொல்லலாம். ஒரு அந்நியனை சந்தப்படுத்த எவ்வளவு காரணங்களை நாம் சொன்னாலும், அடிமையாய் இருந்து தொங்குவதற்கான கல்வியை நம் நாடு பெற்றிருக்கிறதேயொழிய, அந்நிய நாட்டு மக்களுக்கும், நம்நாட்டு மக்களில் சிலருக்கும் சேவகம் புரிந்து வயிர் வளர்க்கவேண்டிய கல்வியைத்தான் நம் நாடு பெற்றிருக்கிறதேயொழிய, சுபாதீனமாய் நாட்டிற்குத் தேவையான பொருட்களை செய்து அல்லது, அந்நிய நாட்டார் நம்மிடம் எதிர் பார்க்கக்கூடிய ஒரு சிறந்த கல்வியை பெற்றுவிட்டோமென்று சொல்லமுடியாது. இந்தியா பண்டைகால சாஸ்திரங்களுக்கும், காந்தங்களுக்கும் பேர்போனது என்று சொல்லுகிறோமேயொழிய, அதிலிருந்து உலகம் பிரமிக்கும்படியான அரிய காரியங்களை செய்ததாகத் தெரியவில்லை.

7. தற்கால ஆபீஸ்களிலோ ஸ்தாபனங்களிலோ வேலைசெய்யும் சர்வகலாசாலைபட்டதாரிகளை வேலையிலிருந்து நீக்கிசுபாதீனமாய் ஒரு தொழில்செய்து குடும்பத்தை நிர்வாகம்செய்ய அவர்களுக்கு சாத்தியப்படுமாவென்று கணக்குப் பார்த்தால் 100க்கு 5 பேர் கூட தேறமாட்டார்களென்றே சொல்லலாம். காரணம், தங்கள் கல்வியைப்பற்றிய சந்தேகம், பிற்கால ஜீவியத்தைப்பற்றிய பயம், தொழில்

செய்யத் தெரியாதென்ற வருத்தம், அவர்தான் இப்படிச் செய்யச்சொன்னார் என்று நண்பரின் மேல் கோபம், அவன் படித்து விட்டால், அந்த ஜாதி படித்துவிட்டால் நம்மை மதிக்கமாட்டான் அல்லது மதிக்கமாட்டார்கள். என்ற பொறாமை. இவைகளினால் அவர்களின் ஜீவாத்மீகசக்தி. அல்லது தாது சக்தி இழக்கப்பட்டு ஒரு வேலைக்கும் லாயக்கில்லாமல் போய்விடுகிறார்கள் என்ன பரிதாபம்! மேநாடுகளில் எவ்வளவு படித்திருந்தாலும் எந்த வேலையிலிருந்து நீக்கப்பட்டாலும் வேறு ஒரு சாதாரண தொழில் சாலையிலாவது போய் கூலி வேலை செய்தாவது முன்னுக்கு வரலாம் என்ற எண்ணம் இருப்பது அதிக மேன்மையாகக் கருதப்படுகிறது.

8. ஜீவாத்மீக சாஸ்திரந் தெரியாததினாலே கல்லூரியிலிருந்து வெளியாகும் மாணவர்களிலனேகர், பெண் வீட்டாரிடமிருந்து ஆயிரக்கணக்கான வரதட்சணை பெற்று சுகஜீவனம் செய்ய ஆசைப்படுகிறார்கள் அது நாட்டிற்கு கஷ்டமேதவிர வேறல்ல. இதற்காகவே சிலர் வருஷங்களாகக் காத்திருக்கிறார்கள். படித்த பெண்களிலநேகர் வரதட்சணை கொடுக்கமுடியாமல் விவாகமில்லாமலேயிருந்தும், சிலர் இஷ்டமில்லாதவரன்களுக்கு விவாகம் செய்விக்கப்பட்டு கஷ்டப்படுகின்றதையும் பார்க்கலாம். இதன்மூலம் அநேகமான வருத்தங்களும், கலகங்களும் ஏற்படுகின்றன. ஜீவாத்மீக சாஸ்திரம் வாசித்துத் தன்னைப்பற்றியும் உலகத்தைப் பற்றியும் அறிந்த ஒருவன் இந்தத் தொகையை ஒருபெரிதாக பாராட்டமாட்டான். பெண்

வீட்டாரிடமிருந்து சந்தோஷமாய் கொடுப்பதை பற்றி நாம் இவ்விடம் ஒன்றும் தர்க்கிக்கவில்லை கட்டாயப்படுத்தி பணத்திற்காக விவாகஞ் செய்வதைவிட மனமொத்து செய்யும் விவாகமே மேலானது என்று சொல்லுகிறோம். தரித்திரத்தின் காரணமாக அநேக பெண்வீட்டார் வாக்கு கொடுத்ததற்கு மாறாக செய்கிறதினால் வீண்மனவருத்தங்கள் சம்பவிக்கின்றன.

9. மேலும் ஜீவாத்மீகசாஸ்திரம் வாசிப்பதால் மனிதனுக்கும், கடவுளுக்கும் உள்ள சம்பந்தமும், சத்தியத்தை எடுத்துக் காட்டுவதில் தைரியமும், ஆரோக்கியம், சந்தோஷம், சமாதானத்தை மக்கள் எந்த விதமாக அடையலாமென்றும், உழைப்பு எவ்வளவு மானிடருக்கு நல்லதென்றும், மனதை எப்படி ஒருமுகப்படுத்தமுடியுமென்றும், ஜீவசக்தி எவ்விதமாக இழக்கப்படுகிறதென்றும், நம்முடைய புது வாழ்க்கை ஜீவரஹஸ்யம் என்னும் கோர்ஸ்களில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

10. கல்வி, ஒற்றுமை, முன்னேற்றம் இம்மூன்றுக்கும் சுயமுயற்சி அத்யாவசியமென்றும், முயற்சிக்குஜீவாத்மீக ஞானமேதவிர வேறல்லவென்றும், இதைப்பற்றி எவ்வளவு வாசித்தாலும், கேட்டாலும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயற்சிக்கவேண்டுமென்றும், நாம் எழுதியிருக்கும் இதா நூல்களில் விளக்கிக் காட்டியிருக்கிறோம்.

10. இதோடு நம் நாட்டுமக்களுக்குள் ஒற்றுமை ஏற்படுவதை எவரும் விரும்புவதால் பிராமண சகோ

தரர்கள், பிராமணரல்லாத சகோதரர்கள், முகம்மதிய சகோதரர்கள், கிறிஸ்தவ சகோதரர்கள், செய்ய வேண்டிய சில விஷயங்களைப் பற்றியும், உண்மையான தேசாபிமானமென்றால் என்னவென்பதைப்பற்றியும், தேச முன்னேற்றத்திற்குக் கவர்ண்மெண்டார் செய்ய வேண்டிய அநந்தங் காரியங்களைப்பற்றியும், இந்திய நாட்டின் கைத்தொழில், விவசாயம், வியாபாரம், முதலியவைகளை எவ்வாறு விர்த்திசெய்து நாட்டை முன்னுக்குக் கொண்டுவரலாமென்பதைபபற்றியும் கூடியவரை எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

12. இதைவாசிக்கும் ஒவ்வொரு இந்திய மகனையும், மகளையும். நாட்டின் ஏழைமக்களின் முன்னேற்றத்திற்கான விஷயங்களில் சமயங்கிடைக்கும்போதெல்லாம் முன்வந்து உழைக்க வேண்டுகிறோம். இதை ஒரு சிறந்த தர்மமாகக் கருதலாம். ஏனென்றால் மக்கள் முன்னேற்றமே, நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிபபடையானது. இந்திய நாட்டின் பிற்கால மக்கள் அடிமைத்தனத்திலேயேயிருந்து இன்றுபோல் தவிக்காமல் நம்மாலியன்ற முன்னேற்றங்கள் பல செய்து வைத்து விட்டுப்போக எல்லாரும் கடமைப்பட்டிருக்கிறோமென்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

A. J. அன்னபயன்

நாசரேத்

1 ஜீவாத்மீகம்

1. ஜீவாத்மீகமென்பது, தேகம், மனம், இவ்விரண்டைப்பற்றிய ரஹஸ்யம். இதை அறிந்தவனே, ஜீவாத்மீகன்.

2. தவறுதல் மனிதனிடம் சாதாரணமாய் காணப்படுகிறது. தவறுதலல்லாதவர் ஒருவரே, அவரே ஜீவாத்மீகன், அவரே பகவான். மனிதனுக்கும் அவருக்கும் சம்பந்தமுண்டு, ஆகையால் அச்சக்தியை அவனும் பெறக்கூடும், முயற்சியே அதைக் கொடுக்கும்,

3. அபஜெயமின்றி ஜெயமில்லை. ஒரு தடவை அபஜெயப்பட்டு பின்னடைகிறவர்கள் ஜீவாத்மீக சக்தியைப்பெற்று இழந்தவர்களுக்குச் சமானம் அபஜெயப்பட்டு ஜெயிக்கப் பிரையாசைப்படுகிறவன் சக்தியுடையவன்.

4, ஆசை பலத்தால் ஏற்படுகிறது. அது பலத்தின் சத்து. பலத்தை சரியானபடி பிரயோகம் செய்கிறவனே மேதாவி. செய்கையைவிட மனிதனின் எண்ணமே சக்தியை வளர்க்கவும் குறைக்கவும் கூடும்,

5. கெட்ட பழக்கம் அறியாமையினால் ஏற்படுகிறது. அது நெருப்புபரவும் சக்தியுள்ளது. அப்படியே நற்குணமும். நற்குணமுடையவன் கெட்ட சகவாசத்தினால் பாவியாயும், பாவி நற்சவகாசத்தினால் நற்குண முடையவனாகவும் மாறக்கூடும்,

6. தீமை செய்தவனுக்கு தீமைசெய்ய நினைப்பது தீமையே. அதைப்பற்றி சிந்திப்பதுவும் தீமையே. அன்பா யிருப்பதால் உலகத்திற்கே நன்மை. மனோதர்மமே இவ்விரண்டையும் பிரித்துக் காட்டுகிறது.

7. உடைநடையை மாற்றி சன்னியாசியாக விருப்பதைவிட ஜீவாத்மீக தர்மத்தைக் கைக்கொண்டு பொது ஊழியனாக விருப்பது மேல். தேக சன்னியாசி சக்தியில்லாதவன். ஜீவாத்மீகன் சக்தியையுடையவன். ஒன்றையும் மறைக்காதவன். அவனுக்கும் பரமனுக்கும் சம்பந்தம் உண்டு.

8. மனிதன் இவ்வுலகில் தன்னையே உண்டு பண்ணுகிறான். அவன் தன்னை மேன்மைக்குக் கொண்டு வராவிட்டால் வேறொருவரும் அவனைக் கொண்டு வரமாட்டார்கள். அவனவன் முயற்சியின்றி உலகத்தில் இதுவரை ஒரு காரியமும் நடைபெறவில்லையே!

9. நாம் அடையும் ஒவ்வொரு நன்மைக்கும் மனதார உழைத்து விடுவதுதான் நல்லது. உழைப்பின்றி வரும் திரவியத்திற்கும் கனத்திற்கும் மதிப்பில்லை.

10. கடவுள் அன்புடையவர். அவரோடு இணைக்கப் பட்டவர்களாகிய நாமும் அன்புடையவர்களாயிருக்க முயலவேண்டும். அந்த இணைப்பின் ரஹஸ்

யத்தை அறிந்தால் உலகத்திற்கு நன்மை. ஜீவாத்மீக ஞானமே அதை வெளிப்படுத்தும்.

11. அதை யறியாமலிருக்கும்வரை கஷ்டமே. அதை ஒழிக்க காலங்களாகும். ஆகையால் உலகமக்கள் யாவரும் பிரயாசை எடுப்பது நலம். அதற்கு ஜீவாத்மீக கல்வியே தேவை. அக்கல்வியை பாடசாலைகளில் முக்கிய பாடமாக (வேதசாஸ்திரம் ஞானசாஸ்திரம்) அமைப்பது அவசியம்.

12. எவ்வளவு மார்க்க ஸ்தாபனங்கள் உலகில் ஏற்பட்டாலும் மக்களின் முன்னேற்றத்தைக் கருதினதாயிருக்க வேண்டும். தன்னயமுள்ள எந்த ஸ்தாபனமும் முன்செல்லாது. தன்னயமுள்ளவன் ஜீவசக்தியை இழக்கிறவனே.

13 மதம் என்பது அன்பே. மார்க்கம் என்பதும் அன்பே. அன்பைவிட மேலானது உலகில் ஒன்றுமில்லை. அன்பில்லா மக்கள் பரமனை தரிசிக்க முடியாது. அன்பில்லாத தேசம் ஒருபோதும் சீரடையாது. அறிவீனமே அறிவுக்குக் காரணம். ஜீவாத்மீக தாமத்தைக் கடைப்பிடிக்கவேண்டும்.

14. அன்பென்னும் சக்தியை கெடுப்பது செல்வச்செருக்கே. அதிலிருந்தே அதிகாரப்பிரியம், சண்டைப்பிரியம் ஏற்படுகின்றன. கடந்த ஐரோப்பா யுத்தத்திற்கு காரணம் லாபப்பிரியம், அதிகாரப்பிரியம், இவ்விரண்டே.

15. தெய்வப்பக்தி யாவரிடமும் இயற்கையில் சொற்பமாவது அமையப் பெற்றுள்ளது. அதை அபிவிர்த்தி செய்தவனே ஞானி. அதற்கு அவன் வேண்டிய சவகாசங்களை உண்டு பண்ணிக் கொள்ளுகிறான்.

16 ஏழைகளை கஷ்டப்படுத்துவது மார்க்கமல்ல. அநியாயஞ் செய்வதைப் பார்த்துக் கொண்டிருப்பது மார்க்கமல்ல. அதற்கு காரணஸ்தராயிருப்பது மார்க்கமல்ல. அதை நிவிர்த்தி செய்ய பிரயாசைப் படுகிறவனே ஜீவாத்மீகன்.

17. தெருவில் நடமாடாதே, தொடாதே, பேசாதே, உள்ளேபுகாதே என்று சொல்வது மார்க்கமல்ல. அது அறிவீனந்தான், சமதர்மத்திற்கு இது அழகல்ல.

13. உலகத்திற்கு ஒரு மனுஷனும் சொந்தமானவனல்லவென்று நினைத்தால் இப்பேர்ப்பட்ட கூற்றுகள் பலநாட்டில் நடைபெறா. பகுத்தறிவில்லா பிராணிகள் நடமாடும் இடத்திற்கு மனிதனைப் போககூடாது என்று சொல்வது இந்திய நாட்டைத்தவிர உலகத்தில் வேறெந்த நாட்டிலுமில்லை.

19. பஹவத்ஞானம் எந்த சமயத்திலும் எக்காலத்திலும் காணப்படும். அதைப் பாராட்டுவது விசேஷம். அதை அகற்றுவது அதர்மம்.

20. சுயநலம் பறந்து போகும். அன்பே தோன்றப்படும். சத்தியமே நிலைநாட்டப்படும். இவ்விரண்டுமில்லாதவர்க்கு விமோசனமில்லை.

21. குடிப்பதாலும், சாப்பிடுவதாலும், மனுஷனுக்கு சந்தோஷம் எற்படாது. தனக்கு பிறரால் கட்டளையிடப்பட்ட செய்தியை உலகத்திற்கு தைரியமாய் எடுத்து காட்டுவதே அவனுக்கு திருப்தி. ஒவ்வொரு மனிதனின் குறைகளைக் கண்டு அதற்கு பரிகாரம் தேடுவதே ஜீவாத்மீகம்.

22. உடுப்பதாலும், பேசுவதாலும், எழுதுவதாலும் அவனுக்கு திருப்தியை அழிக்காது. அதனைப்போல் மற்றவர்களும் ஆவதே அவனுக்கு திருப்தி.

23. கேட்பது பொய், நேரில் பார்ப்பதே மெய். சந்தேகமிருந்தால் தீர்க்கவிசாரிப்பது மேல். நடத்தை இல்லாத எழுத்துக்கும் பேச்சுக்கும் மதிப்பில்லை. நடப்பதே கஷ்டம். அதினால் உலகமதிப்பு கெட்டாலும் கெடலாம். பயித்தியக்காரன் என்றபேர் வந்தாலும் வரலாம். ஜீவாத்மீகன் பயப்படான்.

24. நம் கண்முன் பார்க்கும் ஏழைமனிதனிடம் நமக்கு அன்பு இருப்பதே நாம் ஒருபோதும் பாத்து

அறிய முடியாத கடவுள் மேல் அன்பு உண்டு என்பதை வெளிப்படையாய்க் காட்டுகிறது. மனிதன் பகவான் சொரூப மல்லவா?

25 நாம் எந்த மார்க்கத்தை சேர்ந்த வராயினும் நம் குணமே அம்மார்க்கத்துக்கு ஆட்களை விரைவில் இழுக்கிறது. பெயருக்கென்று ஆட்களை இழுப்பதை விட சத்தியத்தைக் காட்டி ஊழியஞ் செய்வதே விசேஷம்.

26. தொகையை விர்த்தி செய்ய நினைத்து பணத்தை அல்லது கல்வியை அல்லது உத்தியோகத்தைக் காட்டி இழுப்பது மார்க்க மல்ல, சீர்திருத்துவதே மார்க்கம்,

27. தெருவுக்கு ஓர் ஆலயம் கட்டிக் கொண்டு எங்கள் கோயில் பெரியது, உங்கள் கோயில் சிறியது என்று சொல்லி வாதிக்கிறது மார்க்கமல்ல, பகவான் எவ்விடமுமிருக்கிறார், எவ்விடத்திலும் தொழலாமென்று நினைத்தால் கட்டடங்களினால் ஏற்படும் செலவு குறையும், அச்செலவை கல்விக்கு உபயோகிக்கலாம், எம்மார்க்கத்திலிருந்த போதிலும் ஜீவாத்மீகதர்மம் எவனிடம் துலங்குகிறதோ அவனே மேன்குலத்தோன்.

28 சகோதர அன்பு இல்லாதவன் ஜீவாத்மீக னல்ல. பொறுமைப் படுவது அடிமைத்தனத்தை விர்த்தி செய்வது. அறிவீனத்தைப் போக்கவழி தேடாமலிருப்பது ஜீவாத்மீக மல்ல.

29. எல்லாரும் சேர்ந்து தொழுவது நல்லதே. ஐக்கிய மிருப்பது அதைவிட நல்லது. பிரிவினை கூடாது. ஜீவாத்மீக ஞானத்தை சகலரும் அறிந்து கொள்ளலாம். அதை விர்த்தி செய்து ஊழியஞ் செய்வோமாக.

—:✤:—

2 கல்வி.

1. சுயஅறிவு, பொது அறிவைக்கொடுக்கும் கல்வியே, அடிமை இந்தியநாட்டிற்குத் தேவை. இக்கல்வியே சுயா தீனசிந்தையைக் கொடுக்கும். அடிமைத்தனத்தை அகற்றும். இதுதான் நாட்டின் கைத்தொழிலே, விபசாயத்தை விர்த்தி செய்யும். ஒருபோதும் சுயமுயற்சியில்லாதவரிடம் சுயஅறிவு பொதுஅறிவு இருக்காது.

2. கல்வி சகல மக்களுக்கும் உரித்தானது. இக் கல்வியை பாடசாலைகள், சங்கங்கள். பத்திரிகைகள் மூலம் கொடுக்கலாம். சபைகள் கூடி ஆராய்ச்சி செய்யலாம்.

3. சுயமுயற்சியுடைய கல்வியே மேநாடுகளை உயர்த் தினது. கல்விற்குச் செலவு செய்வதே நாட்டை உயர்த்தும் கல்விற்குச் செலவு செய்யாதவன் பின் கஷ்டத்திற்குள்ளாகி கலங்கவேண்டும். ஆடம்பரத்துக்குச் செலவு செய்வதைவிட கல்விற்குச் செலவு செய்வதே மேல்.

4. கல்விற்குச் செலவு செய்வதற்கு, சொற்ப சம்பாத்தி யத்தை ஒவ்வொருவரும் ஒதுக்கவேண்டும். மனிதன் சாகும் வரை அநேக காரியங்களைப்பற்றி அறியவேண்டியவனுயிருக் கிறுன்.

5. எந்தப்பாஷையிலும் வித்வமடைந்தவன் ஒருவனு மில்லை. வித்வமடைய மனிதனுக்கு சக்தியுண்டு. ஆனல், மனித னின் கவனம் அநேக தொல்லைகளில் செல்லுகிறது.

6. ஆங்கில பாஷை நல்ல பர்ஷையே. ஆனல் இந் திய கல்லாத மக்களை மிரட்ட அல்லது உருட்ட அதைப்

படிப்பது தர்மமல்ல. தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ளவும் மற்றவர்களுக்கு உதவி செய்யவுமே படிக்க வேண்டும்.

7. அடிமைத்தனத்தை உண்டுபண்ணக்கூடிய படிப்பே தற்காலம் நாட்டில் காணப்படுகிறது. ஸ்யாதீனமாய் நூதன முறையில் ஆராய்ச்சி செய்வதான கல்வி நாடு அவசியம் பெறவேண்டும்.

8. கற்க முடியாதுஎன்று சொல்வது தவறு. வருந்தினால் முடியாததொன்றுமில்லை. முன்னேற ஆசையில்லாத மனிதனுக்கும் சோம்பேறிகளுக்கும் இவ்வுலகமல்ல.

9. கல்வி, ஞானம், தொழில் ஞானம், உத்தியோக ஞானம் பெற அநேகருக்கு சக்தியிருந்தும் அச்சக்தி பயம் சந்தேகம், துன்பம் என்னும் வியாதிகளால் குன்றிப்போகிறது.

10. உலகிலுள்ள, பெரிய வியாதிகள் அறியாமை, பயம் சந்தேகம், துன்பம், பொறாமை இவைகளே; இவைகள் மனிதனால் ஏற்பட்டவை. பகவான்மேல் பழிகூறுவது அறிவீனமே,

11. இவைகளை நீக்க, ஜீவாத்மீக கல்வியே தேவை. அது நாட்டில் அவதரிக்கும் வரை பலவிதமான மருந்துகள் அவசியமே. ஜீவாத்மீக கல்வியே சுயஅறிவு பொதுஅறிவை விர்த்தி செய்யும்.

12. மருந்தினால் வியாதி குணமாகாது. விசுவாசத்தினால் வியாதிகுணமாகும். விசுவாசமே ஞானம், ஞானமே விசுவாசம். விசுவாசமில்லாதவனே அஞ்ஞானி.

13 தேசத்தில் கல்வியை விருத்திசெய்ய அநேக சுய

முயற்சி சங்கங்கள் திறவப்படவேண்டும். ஏழைமக்களுக்குக் கல்வி இனமாக அளிக்கப்படவேண்டும். அநேக பத்திராலயங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். இது விஷயத்தில் சர்க்கார் கவனம் எடுக்கவேண்டும். சுயமுயற்சி கலாசாலைப்படிப்போடு திர்ப்தியடையாது.

14. அது ஜீவதண்ணீரைப்போல் ஊறிக்கொண்டிருக்கும். அது நூதன ஆராய்ச்சி செய்ய ஊக்கத்தைக் கொடுக்கும்.

15. சுயமுயற்சியுள்ளவன் ஒருபோதும் அடிமையாய் இருக்க ஆசைப்படமாட்டான். சுயமுயற்சியுள்ள தேசம் அடிமை தேசமாயிராது. தேச தொண்டர்களின் கவனம் இதில் செல்லட்டும்.

16. சுயமுயற்சி கல்வியைத்தடைபண்ணும் எந்தஸ்தாபனமும் ஒரு காலம் கஷ்டப்படவேண்டியதவரும். இந்திய நாட்டிற்கு ஜீவாத்மீகஞானம் ஏற்பட்டுவிட்டால் சுய முயற்சி தானே வந்துவிடும். பின் சகலவித ஆராய்ச்சிகளும் பெருகும்.

17. கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் சிலரிடமிருந்து ஒரு சிலர் சுகஜீவனம்செய்ய நினைப்பதே நாட்டிற்கு க்ஷீண திசையைக் கொண்டுவருகிறது.

18. அதைப் போக்கடிக்க பல சுயமுயற்சி சங்கங்கள் நாட்டில் அவதரிக்கவேண்டும். பிறர் உதவியை நம்பி சதா ஜீவியம் செய்யக்கூடாதென்ற விஷயத்தை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

19. இந்தியநாட்டில் ஒருவர் சம்பாத்தியத்திலிருந்து

வேலை செய்யக்கூடிய பலர் சாப்பிட்டு நேரத்தை வீணாய்க் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சுய முயற்சி இதை நீக்கும்.

20. வீட்டிலிருந்து வேலை செய்துகொண்டே சுயமுயற்சியால் படித்த பலர் மேல்நாட்டில் அனேகர் முன்னுக்கு வந்து பெரிய சாஸ்திரிகளாய் விளங்குகிறார்கள்.

21. சுயமுயற்சி படிப்பினால் முன்னுக்கு வந்தவர்கள் அநேகர். கலாசாலைப்படிப்பினால் மேம்பாடடைந்தவர்கள் சிலர். கலாசாலைபடிப்போடு சுயமுயற்சி கல்வி யிருப்பது அதிக நன்மையைக் கொடுக்கும்.

22. தபால்படிப்பு சாலைகளுக்கு ஜனங்களின் உதவி அவசியம். அல்லேல் ஸ்தாபனங்கள் வீழ்ந்துபோகும். ஸ்தாபனங்களை நடத்துகிறவர்கள் அதிக உண்மையாயும் உழைப்பாளிகளாயு மிருக்கவேண்டும்.

23. அமெரிக்கா, இங்கிலாந்து தேசங்களில் தபால் படிப்பு ஸ்தாபனங்கள் ஏராளம். அவைகளில் நல்லவேலைகள் நடைபெறுகின்றன.

24. வேலையை விட்டு கலாசாலைகளில் நேரில்போய் அதிகத் தொகை செலவுசெய்து படிக்க முடியாதவர்கள் தபால் ஸ்தாபனங்களில் வாசித்தறியலாம். அதில் படிக்க வேண்டிய கால அளவு வரையறுத்துக் கொள்வது நலம். பகலில் வேலைசெய்வதால் படிக்க முடியாதவர்களுக்கு கிராமங்களிலும் பட்டணங்களிலும் இராப்பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டும்.

25. இந்திய நாட்டில் கூட ஏராளமான கல்விஸ்தா

பனங்களிருக்கின்றன. இருந்தும் இன்னும் 100க்கு 5 பேர் படிக்கவில்லை. என்ன பரிதாபம்! தாய்பாஷை வாசிக்க எழுதத்தெரியாதவர் எத்தனையோ பேர்களிருக்கின்றனர்.

26 அநேக கல்வி ஸ்தாபனங்களில் படியாத வகுப்பை சேர்ந்த மக்களுக்கு உதவி கிடையாது. அப்படியாயின் அவர்கள் எப்படி முன்னுக்கு வரமுடியும்?

27. உத்தியோகங்களை வகிக்கமாத்திரம படியாமல தேசத்தை உயர்த்த, மக்கள் அறிவை உயர்த்தப் படிக்கவேண்டும்.

28. கல்வியில் பிற்போக்கானவர், சொற்பம் படித்து வந்தாலும் அவர்களுக்கு உத்தியோகம் கொடுத்து உற்சாகப்படுத்துவது கவர்ன்மென்டின் கடமை. அது விஷயத்தில் போராடுவது மக்களின் கடமை. ஜில்லா கல்விலாக்கா தலைவர்கள் இது விஷயத்தில் கவனம் எடுக்கவேண்டும்.

29. ஒரு ஊரில் படித்துவந்த சிலர் தங்கள் பிழைப்பை நாடி அயல் இடஞ்சென்றாலும் தங்களைப் போல் மற்றவர்களும், அறிவைப் பெற வேண்டுமென்று முயற்சிப்பது அவர்கள் கற்றதற்கு பெருமை. படித்து சுயகாரியமாய் இருப்பதை விட, படியாதிருப்பது நன்மை.

30. தாய்மொழியும் அத்துடன் ஆங்கில பாஷையும் ஒவ்வொருவரும் சரிவர வாசித்தறிய வேண்டும். அதற்குள்ளே தொழிற்படிப்பு, விபசாய

படிப்பு, பண்டமாற்றப்படிப்பும் இருக்சவேண்டும்.

31. ஒவ்வொரு வகுப்பினரின் கிஸ்தி விதப்படி ஒரு பகுதியை அதன் கல்விக்கென்று சர்க்கார் ஒதுக்கி வைத்து விடவேண்டும்.

32. இந்தியா தேசத்திலுள்ள கலாசாலைகளிலோ பெரிய பாடசாலைகளிலோ, கற்றுத்தேறின மக்களுக்கு அவரவர்களுக்குரிய உத்தியோக படிப்புக்கு உடனே அனுமதி கொடுக்கவேண்டும்.

33. அநேகர் சிலபாடங்களில் 2 அல்லது 1 மார்க்கு குறைவினால் தங்கள் ஜீவியம் முழுவதும் கஷ்டப்பட வேண்டியதாயிருக்கிறது. அநேக சொல்லி முடியாத துன்பங்களுக்கு காரணமாயிருக்கின்றன.

34. சிலர் வயிற்று பிழைப்புக்கு ஆதாரமாயிருக்கும் ஒரு சர்ட்டிபிக்கேட் கிடைத்துவிட்டால் போதும் என்று நினைத்து அறிவை விர்த்திசெய்ய பிரயாசப்படாமலிருக்கின்றனர்.

35. இந்திய மாணவர்களைப் பாஸ் செய்ய செய்து சர்ட்டிப்பிக்கேட் கொடுக்கும் விஷயத்தில் அதிக கடுமையாயிருப்பதால் இந்திய சர்வகலாசாலைகளுக்கு பெரிய கீர்த்தி ஏற்பட்டு விட்டதாகவும் தெரியவில்லையே!

36. அடிமை வேலைகளுக்கு வரும்படியான படிப்புகள் தான் இருக்கின்றனவேயொழிய உலகத்

திலே பெரிய நூதன காரியங்கள் கண்டுபிடித்து விட்டோமென்று சொல்லமுடியவில்லையே!

37. இனியாவது கல்வியிலாக்கா டிப்பார்ட்மெண்டார் இந்திய மாணவர்களின் முன்னேற்றத்தை தடை செய்யாது இருப்பார்களாக.

38. உயர்தர படிப்புக்கு கீழ்தர படிப்பு ஆதாரமாயிருப்பதாலும் அஸ்திபாரம் கீழ்தர கல்விக்கு சரிவர போட வேண்டியதாயிருப்பதாலும் அநேக சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

39. கீழ்தர உபாத்திமார்களுக்கு அவர்கள் குடும்பத்தை சவரக்ஷணை செய்யக்கூடிய சம்பளம் கொடுக்க வேண்டும். குடும்ப கவலைகளை வைத்துக் கொண்டு பாடசாலைகளில் அவர்கள் சரிவர வேலை செய்யமுடியாது. ரூ 40 க்கு குறைந்த சம்பளக்காரர்கள் இருக்கக்கூடாது

40. கோடிக்கணக்கான மக்கள் அறிவீனத்திலும், தரித்திரத்திலுமிருந்து கஷ்டப்பட்டு கொண்டிருக்கும் போது பெரியபெரிய கட்டடங்களும் கோபுரங்களும் அழகாய் கட்டுவதினால் என்ன பிரயோஜனம்?

41. எல். டி. க்கு ரூ 100, சக்கண்டரி ரூ80, ஹையர் ரூ60, லோயர் ரூ 40, இதற்கு குறைவான சம்பளத்தை உபாத்திமார்களுக்கு கொடுப்பதாலும்

இரண்டொரு வருஷங்கள் அதிகமாய்ப் படித்து விட்டதால் ரூ300/—வரை புரோமோஷனும், இரண்டு மூன்று வருஷம் படிப்பு குறைவதால் ரூ 50 வரை என்றால் தர்ம மல்லவே!

42. மேலும் சில ஏழை உபாத்திமார்கள் கிராமங்களில் பாடசாலைகளை வைத்து கவர்ண்மெண்ட் கிராணைட்யே தஞ்சமாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள். சில ஸ்கூல் இன்ஸ்பெக்டர்கள் அவர்களை ஆட்டிவைக்கிறார்கள். அது தர்மமல்ல.

43 அந்த இன்ஸ்பெக்டர்கள் தாங்களும் இந்தியர்கள் தான் என்று நினைக்கிறதில்லை. அதிகார பிரியத்தை கையிலேந்தி நிற்கும் அவர்களுக்கு ஐயோ! சிலர் விரிவான நோக்கமுடையவர். அவர்களை நாம் வாழ்த்துகிறோம்.

44 ஏழை எலிமெண்டரி ஸ்கூல் உபாத்திமார்களின் கூக்குரல் வானபரியந்தம் எட்டியிருக்கிறது. கல்வியிலாக்கா டிப்பார்ட்மெண்டார் இதைக் கவனிப்பார்களாக.

45. நாட்டின் கல்வி அறிவை விர்த்தி செய்யும் படியான வழிகளில் தேசதொண்டர்கள் சர்க்காரோடு இனி போராடுவார்களாக.

3 தேசாபிமானம்

1. தேசமுன்னேற்றத்துக்கான வழிகளில் சிந்தனை செலுத்தி உண்மையான பற்றுதலோடு உழைப்பதுவே தேசாபிமானம்.

2. ஒரு ராஜதானியிலோ, ஜில்லாவிலோ, தாலுக்காவிலோ, கிராமத்திலோ, குடும்பத்திலோ, வரும் நஷ்டத்தையும் கஷ்டத்தையும் தன் நஷ்டமாகவும் கஷ்டமாகவும் பாவித்தலே தேசாபிமானம்.

3. தனக்கல்ல மற்றவனுக்கு என்று நினைப்பவனே தேசாபிமானி. தான்சுகிக்க அல்ல பொது மக்கள் நன்மைபெற வேண்டுமென்று நினைப்பவனே தேச ஊழியன்.

4. ஒரு காட்டைக் கொளுத்துவதற்கு ஒரு நெருப்புக் குச்சி போதுமானது. அதேமாதிரி ஒருவர் அறியாமல் செய்யும் காரியத்தால் தேசத்திற்கே பலத்த கேடுகள் ஏற்பட்டு விடும்.

5. ஒற்றுமையாமை இயக்கத்தால் எத்தனையோ வாலிபர், கல்வியை நிறுத்தி, எத்தனையோ வக்கில்கள் வேலையை நிறுத்தி, எத்தனையோ வியாபாரி

கள் வியாபாரத்தை நிறுத்தி நஷ்டப்பட்டு தவித்தார்கள். மக்களுக்குள் சுயமுயற்சி ஏற்பட்டு சமதர்மம் ஓங்கும்வரை ஒற்றுமையாமை இயக்கத்தால் நாட்டிற்கு அவ்வளவு பிரயோஜன மில்லை. அதனால் பிரயோஜனமில்லையென்றும் சொல்லிவிடமுடியாது. சர்க்காருக்கு ஒருவிதமாய் பாடம் கற்பிக்கப்பட்டிருக்கிற தென்றும் சொல்லலாம்.

6. ஜனசமூகத்திற்கு ஜீவாத்மீக ஞானம் ஏற்பட்டு, சுயமுயற்சி கல்வி ஏற்பட்டு, சமதர்மம் வந்துவிட்டால் அதுவே முதல் சுயராஜ்யம் என்று சொல்லலாம். சோம்பேறிகளாய் நாட்டில் இருந்து கொண்டு ஏழை மக்கள் சம்பாத்தியத்தை தின்று கொண்டு அவர்கள் முன்னேற்றத்திற்கு பாடுபடாமலிருந்து வந்தால் சுயராஜ்யம் வந்தாலும் என்ன பிரயோஜனம்?

7. மக்களுக்குள் வேற்றுமையின்றி, சோம்பலின்றி, எல்லாரும் தேசநன்மைக்காக வேலை செய்து ஜீவாத்மீக தர்மத்தைக் கைக்கொண்டு நடந்து வருவதாலான சுயராஜ்யம் முதலாவது ஏற்பட்டுவிட்டால் அடுத்தது தானே வந்துவிடும்.

8. ஒருசிறிய சாமானை எடுத்த ஒரு மனுஷனைப் பிடித்து திருடன் என்ற பட்டம் அவனுக்குக் கட்டி கோர்ட்டில் இழுத்து அடிப்பது சாதாரணம். அதைவிட மனமாரத்தெரிந்த காரியங்களை

மிரட்டி, உருட்டி, பேசி நியாயத்தைக் கெடுத்து பொது உடைமையான சர்க்கார் திரவியத்தை விரயஞ்செய்து ஏழை மக்களிடம் லஞ்சம் வாங்கி பிழைக்கின்ற திருடர்களை என்னவென்று சொல்வது?

9. வெள்ளையர்கள் உத்தியோகஸ்தராய் இருந்த இடத்தில் இந்திய மக்களை இருத்தினால் யாதொரு அபிமானமின்றி சிலர் என்ன கேவலமாக ஏழை மக்களை நடத்துகிறார்கள்?

10. எத்தனையோ மனுக்கள் வெள்ளையரே தேவை என்று போகின்றன. கருப்புப் பாதிரிகளிருக்குமிடத்தில் வெள்ளைப்பாதிரிகள் தான் வேண்டுமென்று எத்தனையோ இடங்களில் கேட்கிறார்கள். வெள்ளை சூப்பிரண்டண்டு, வெள்ளை இன்ஸ்பெக்டர், வந்தால் நல்லது என்று சொல்லுகிறார்கள். காரணம் நமக்குள் அன்பில்லாக் கொடுமையும் அபிமானமில்லா சிந்தையுமே!

11. தேசாபிமானம் பெருக கதர் உடுத்திவிட்டால் போதுமா? அயல் வீட்டுக்காரன் சாகும் தருணத்திலிருந்தாலும் ஒரு காசு கொடுத்து உதவாதவர்கள் கதர் பண்டுக்கு ஆயிரக் கணக்காகக் கொடுத்து விட்டாலாவது போதுமா? ஏழை மக்களிடமிருந்து கோடிக்கணக்கான திரவியம் சுயராஜ்யம்பெற வசூலித்தால் போதுமா? மக்கள் செய்கை, பேச்சு, நடத்தை, வேற்றுமை, நீக்கப்

பட்டு அந்யோன்யம், சுயமுயற்சி பெருகினுலல்லாது நாட்டிற்கு என்ன பிரயோஜனம்?

12. தேசத்துக்கு அன்புடையவன், மக்களிடம் அன்புடையவன், மக்களிடம் அன்பில்லாதவன் தேசாபிமானியல்ல. நான் உயர்ஜாதி நீ தாழ்ந்த ஜாதி என்று சொல்பவன் தேசாபிமானியல்ல

13. பழைய காலத்திற்குத் தகுந்தபடி எழுதிக்கிடந்த சில க்ரந்தங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு எவ்வளவு கற்றறிந்தும், மற்றவர்கள் ஏதாவது சொல்லி விடுவார்களோ என்று பயந்து நிற்பவர்கள் தேசதொண்டர்களல்ல

14. ஜாதி செருக்கு, மத செருக்கு, பண செருக்கு, உத்தியோக செருக்குகளை ஒழிய வைப்பதே தேசாபிமானம்.

15. ஒவ்வொரு ஜாதிகளுக்குள் ஏற்படும் பிரிவை நிவிர்த்தி செய்து சச்சரவுகளை ஓயச்செய்வதே தேசாபிமானம்.

16. உத்தியோகத்தை உத்தேசித்து, சம்பாத்தியத்தை உத்தேசித்து நடப்பது தேசாபிமானமல்ல. ஹிருதயத்தில் மக்கள் மேல் அன்புகூர்ந்து தேசத்துக்குப் பணிவிடைசெய்வதே தேசாபிமானம்.

17. படியாதமக்களுக்கு படித்த மக்கள் சமத்வம் கொடுத்தால், இந்தியாவுக்குத்தானே சுயராஜ்

யம் வந்துவிடும்.

18. படியாத மக்களுக்கு தீண்டப்படா தார்க்கு, சொற்பப் படிப்பாவது இருந்தால் தான் படித்த மக்கள் சொல்வது அவர்களுக்கு விளங்கி இருதிறத்தாரும் தேசத்திற்காக போர் புரியலாம்.

19. ஆகையால் படிப்பே நாட்டிற்கு அவசி யம். கல்வி விஷயத்திற்கு சர்க்காரை செலவுசெய்ய முதலாவது தேசாபிமானிகள் வற்புறுத்தவேண்டும்

20. ஒரு வகுப்பினர் இன்னொரு வகுப்பி னரை வேறு சிலரைக்கொண்டு துவேஷமாகப்பேசச் சொல்வது தேசாபிமானமல்ல. அது மக்களுக்குள் ஒற்றுமை இல்லை என்பதைக் காட்டுகிறது. மக்களுக் குள் பிரிவு பலவாறு இருப்பதுபற்றி சர்க்காருக் கும் அதன் தாஸர்களுக்கும் சந்தோஷமே.

21. தேசத்தை ஆள ஆசைப்படுவதை விட தேசமக்களுக்கு ஊழியஞ்செய்வதே தர்மம். சம தர்மம் அதால் ஓங்கும். நாட்டில் ஒற்றுமைதானே ஏற்படும்.

22. பல்வேறு பிரிவுகளை யுடைய இந்திய நாட்டை ஒரு அயல் நாட்டார் ஆள்வதென்றால் கஷ்டமே. இப் பிரிவுகளெல்லாவற்றிற்கும் சமதர் மம் ஏற்படாவிட்டால் பிரிவுகளிருந்து கொண்டுதான்

வரும். நாம் எல்லாரும் இந்தியர் என்ற எண்ணம் ஏற்படவேண்டும்.

23. சுய முயற்சியே சுய மரியாதையைக் கொடுக்கும். சுய மரியாதையே சுய ராஜ்யத்தைக் கொடுக்கும். இம்மூன்றும் ஒன்றே. இம்மூன்றையும் உடையவர்கள் தான் தேசாபிமானிகள்.

24. இந்திய நாடு வலிமைப்படும். தேசத்திற்கு நன்மைப்புரியும். இந்தியகைத்தொழிலை யாவரும் ஆதரிக்கவேண்டும். சுய முயற்சியின்றி கதர் ஆடை தரிப்பது விசேஷமில்லை. சுயமுயற்சி நாட்டிற்கு ஏற்பட்டுவிட்டால் அன்னியருக்கு தேசத்தில் வேலை இல்லை.

25. சுய முயற்சியே இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா தேசங்களை உயர்த்தினது. அந்த முயற்சி இந்தியா நாட்டிற்கு அவசியம். தீண்டாமை, அறியாமை என்னும் பேய்கள் ஒழிந்து போகும்.

26. சிலர் நினைக்கிறபடி யந்திரங்களின்றி கையினால் நூற்ற ஆடை 33 கோடி ஜனங்களுக்கும் திடீரென சப்ளை செய்வது சுலபமல்ல. 18ம் நூற்றுண்டிலிருந்த மாதிரி 20ம் நூற்றுண்டில் இந்தியாவைக் கொண்டு வருவது சுலபமல்ல.

27. காலங்களின் மாறுபாட்டிற்கும் கல்வி

அபிவிர்த்திக்கும் தகுந்தவாறு காரியஞ் செய்ய வேண்டும்.

28. பொது நன்மைக்கு இடைஞ்சலாயிருக்கும், எந்தச் சட்டத்தையும், எந்த ஸ்தாபனத்தையும், எந்தக் காரியங்களையும் முதலாவது தள்ளவேண்டும்.

29. தீண்டப்படாதாரை முன்னுக்குக்கொண்டு வருவது உயர்குலத்தோர் என்று சொல்பவரின் கடமை. நாடு ஒரு வழிக்காரருக்கு மாத்திரமல்ல எல்லா மக்களுக்கும் சம உரிமையுண்டு.

30. 100க்கு 5 பேர் கூட படியாத ஓர் நாட்டில் சுயராஜ்யம் வந்தாலும், என்ன பிரயோஜனம்? கல்லாத மக்களும், ஏழை மக்களும், தீண்டப்படாத மக்களும் என்றும் அடிமையாய்த் தானிருப்பார்கள்.

31. தேசாபிமானிகள் நாட்டின் கல்வி, கைத்தொழில், வாணிபம், விபசாயம் முதலியவைகளின் முன்னேற்றத்தில் சர்க்காரை தூண்டவேண்டும்.

32. தேசத்தில் படித்த சிலர் படியாதவர்களை அல்லது அறியாதவர்களை அதிகாரஞ்செய்யவோ அல்லது அவர்களை கஷ்டப்படுத்தி தேச நிர்வாகம் செய்து விடலாமென்று நினைப்பது தவறு.

33. நமக்குள் ஒற்றுமை ஏற்படக்கூடாத அநேக குறைவுகளை வைத்துக்கொண்டு சர்க்காரின் சில சட்டதிட்டங்களை மீறி நடப்பதால் பிரயோஜனப் படாது.

34. நம்நாடு தற்காலம் ஆங்கில அரசாட்சியின் கீழ் இருந்தாலும் படித்த இந்திய மக்களே ஒருவாறு தேசத்தை ஆட்சி புரிகிறார்களென்று சொல்லலாம். அவர்களில் சிலர் டிப்பார்ட் மெண்டு களிலிருந்து செய்யும் அட்டகாசஙகளுக்கோ அளவேயில்லை. அவர்களின் கூற்றுகளுக்கு சர்க்காரே காரணம், சுயராஜ்யம் வந்தபின் இப்பேர் கொந்த ஆசாமிகளுக்கு தொந்தரவு ஏற்படத்தான் செய்யும்.

35. இப்படியிருக்க சகல வெள்ளையர்களையும் மேகாட்டுக்கு அனுப்பிவிட்டு எல்லா வேலைகளிலு மிருந்து கொண்டு சௌகரியமாயிருக்கலாமென்று நினைப்பது சரியல்ல.

36 கோடிக்கணக்கான மக்களின் பாதியேர்கள் அறிவீனத்தையாவது ஒழித்து, அன்பினால் அரசு புரிய நாம் கற்றுக்கொள்ளும் வரை நாம் செய்யுங் காரியங்களில் பிரயோஜமாயிருக்காது.

37. காங்கிரசிலும் இதர மகா நாடுகளிலும், ஒற்றுமை காணப்படுவது மேல். அவைகளின் யோ

தனைப்படி சாதனையிலும் காட்ட முயற்சிக்க வேண்டும்.

---

4 அரசியல்.

1. சட்ட திட்டங்களையுடைய அரசியல் இருப்பது நல்லது. ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் ஜீவாத்மீக தர்மத்தை கைக்கொள்ளவேண்டும்

2. நாட்டின் அறியாமையை நிவிர்த்திசெய்து சமாதானத்தை உண்டு பண்ணக்கூடிய அரசாங்கம் சிறந்தது, அன்பில்லா அரசாங்கம் குடிகளால் ஒருபோதும் மதிக்கப்படாது.

3 பல்வேறு பிரிவுகளையுடைய இந்திய நாட்டில் அரசாங்கம் செலுத்துவது ஒருவாறு கஷ்டமே. ஆனால் பிரிட்டிஷ்அரசாங்கம் நாட்டில் அநேக சீர்திருத்தங்களை செய்திருக்கிறது. செய்ய வேண்டியவைகள் இன்னும் அனந்தம் இருக்கின்றன அவை கல்வி விஷயமேதவிர வேறல்ல.

4 சூரிய உஷ்ணத்தில் வேலை செய்து வாடி நின்று தவிப்பவரிடமிருந்து வரி வசூல் செய்து

படித்த சிலர் சௌகரியத்துக்குச் செலவு செய்து சொகுசுடன் காலங்கழிப்பதற்கல்ல இராஜாங்கம்.

5 சமயத்துக்கு வேண்டிய சட்டங்கள் உண்டுபண்ணி அறியாதவரை இம்சைப் படுத்துவதை விட அவர்களின் முன்னேற்றத்திற்கு பாடு படுவது சர்க்காரின் கடமை.

6. ஒவ்வொரு பிரிவின் தலைவரைத் தெரிந்தெடுத்து, அதன மூலம் ஒவ்வொரு பிரிவிற்கும் தேவையான காரியங்களை செய்வதே அரசியல் தர்மத்திற்கு அழகு.

7. தந்திரத்தைக் கையாடும் ஒரு கோஷ்டிக்கு சில உத்தியோகங்களைக் கொடுத்துவிட்டால் அநேக பிரிவுகளையுடைய இந்திய ஜனசமூகத்தை ஒருபோதும் சர்க்கார் திருப்தி செய்து கொள்ள முடியாது

8. அனந்தங்கோடி இந்திய மக்களிடம் வரி வசூல் செய்து அவர்களின் அறிவை வளர்க்கப் பிரயாசப்படாமல், கஷ்டத்தை நீக்காமல், சட்டத்தை மாத்திரம் உண்டாக்கவும், வரியை உயர்த்தவும் வேற்றுமையை வளர்க்கவுமா செலவழிக்கப்படுகின்றது?

9. அரசியலிடம் இருக்கும் பணத்தை திரமாக சுயமுயற்சி பொது முயற்சிக்குறிய கல்வி விஷயங்களில் செலவு செய்வதே தர்மம். 6½ கோடி ரூபாய் கல்வி விஷயத்திற்கு செலவு செய்யப்படுவது

போதாதென்று அரசியல் அறியவேண்டும். பிற்போக்கான மக்களின் முன்னேற்றத்திற்கு அதிகம் செலவு செய்ய வேண்டும்.

10. இந்திய நாட்டிலிருக்கும் பல்வேறு பிரிவுகளுக்குத் தகுந்தமாதிரி, வரிகொடுப்பதற்குத் தகுந்த மாதிரி, ஜன சமூகத்திற்குத் தகுந்த மாதிரி, சட்ட சபையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

11. எல்லாப்பிரிவுகளும் சமமாக அறிவுபெற்று ஓலைருங்காலம் கைத்தொழில், விவசாயம், வியாபாரம்முதலியவைகள் விர்த்தியாகும். அந்தச்சமயம் சர்க்கார் உத்தியோகங்களுக்கு போட்டி எற்படாது.

12. இந்தியாவின் பொது ஸ்தாபனத்திலிருக்கும் லார்டுஇர்வின் இந்தியாவின் பிற்கால விஷயத்தைப் பற்றியும், இங்கிலாந்தில் கூடும் வட்ட மேசை கான்பரன்ஸைப்பற்றியும் பேச தென் இந்திய தலைவர்களை நீக்கி சில வடநாட்டுத் தலைவருக்கு மாத்திரம் பேட்டிகொடுத்தது சரியல்ல.

13. வட்டமேசை கான்பரன்ஸிக்கு; ஹிந்துக்கள் முஸ்லீம். கிறிஸ்தவர்கள் இப்மூன்று பிரிவுகளிலுமிருந்தும் டெலிக்கேட்டுகள் தெரிந்தெடுப்பதே விசேஷம்.

14. லண்டனைப்போய்ப் பார்வையிட்டு வேடிக்கை பார்த்து வர ஆசிக்கும் தலைவர்களைவிட பொது உணர்ச்சி, சகோதர தத்துவ ஆராய்ச்சியுள்ளவர்களை தேர்ந்தெடுத்து அனுப்புவது மேல்

15. நாம் போய்ப் பார்த்த கிராமங்களிலும் பட்டணங்களிலும் ஜனங்களின் அறியாமை ஒற்றுமையின்மை தரித்திரம் முதலியவைகளைப்பற்றி எழுதி முடியாது.

16. கள், சாராயக்கடைகளை எடுத்துவிட சர்க்கார் முயற்சி செய்ய வேண்டும். அதினால் அவர்களுக்கு வரும் வருமானத்துக்கு மாற்றாக அந்நிய நாட்டு சமான்களுக்கு அதிக வரி போடுவது நலம்

17. சில இடங்களில் உத்தியோகங்கள் சக்தியைப் பொருத்ததல்லாமலும், சமூகத்தைப் பொருத்தல்லாமலும், சிவார்சைப் பொருத்ததாயிருக்கின்றன. அரசியல் இதைக்கவனிக்க வேண்டும்.

18. அநேகர் மதிப்பை உத்தேசித்து அரசியல் வேலைக்குப் போகிறார்களேயொழிய பொது ஜனங்களுக்கு எப்படியாவது நன்மை செய்யவேண்டுமென்றும், தேசநிலமையை மாற்ற வேண்டுமென்றும் நினைக்கிறதாக தெரியவில்லை.

19 அவர்கள் ஏழை இந்திய மக்களின் சார் பாக ஊழியஞ்செய்ய அழைக்கப்பட்டிருக்கிறார் களென்று நினைக்கிறதில்லை. அப்படி நினைத்தால் நாடு இன்று இருக்கும் நிலைமையில் இருக்காது.

20. பிற்போக்கான மக்களுக்கு அதிக கல்வி இல்லாவிட்டாலும் அந்தந்த இடத்தில் அவரவர் அறி விற்குத்தக்கபடி வேலை கொடுப்பது அரசியல் கடமை. அல்லேல் அந்தவகுப்பு அதிக வருஷங்களாக கீழான நிலைமையில்தானிருக்கும்.

21. ஏனென்றால் சர்க்கார் என்பது பொது உடமை. அதை ஒரு சாரார் மாத்திரம் அநுபவிப் பது நல்லதல்ல. இதை அரசியல் கவனிக்கவேண் டும். அல்லேல் மக்களுக்குள் ஒருபோதும் சமா தானம் ஏற்படாது.

22. கட்டாயம் எலிமெண்டரிப்படிப்பை தேச முழுவதும் அரசியல் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். கல்வி விஷயத்திற்கு 20 கோடியாகிலும் செலவு செய்யப்படவேண்டும்.

23. தேச முன்னேற்றத்திற்கு பாடுபடுபவரி டம் சர்க்கார் அனுதாபம் காட்டவேண்டும்

பிராமணர்கள்.

1. இந்தியநாட்டில் பிராமணச் சகோதரர் கல்வியில் முன்னேற்றமடைந்தவரென யாவருக்கும் தெரிந்த விஷயமே.

2. இந்த முன்னேற்றம், அவர்களின் முன்னோர்கள் பண்டைய இந்தியாவில் தேர்ச்சி பெற்றிருந்ததின் பயனாலும், அவர்களின் விடா முயற்சியினாலுமே தவிர வேறல்ல

3. வேதங்களை ஆராய்ச்சி செய்வதிலும் பஹுவத்கீதத்தை வாசிப்பதிலுமிருந்த அவர்கள் ஆங்கிலர் இந்தியா வந்தவுடன் மேநாட்டுக் கல்வியை பயில ஆரம்பித்தார்கள்.

4. கல்வி, விசேஷமாய் பெற்று முன்னேறினாலும் அவர்களில் சிலர் வேதங்களை ஆராச்சி செய்து நற்கிரியைகளில் சிந்தனை செலுத்தி வந்திருக்கிறார்கள் அவர்களிலநேகர் வாசித்து உத்தியோகங்களில் 100க்கு 90 பேர் இருந்தாலும் இன்னும் திருப்தியின்றி மென்மேலும் கல்வியில் நாட்டமுடையவராயிருப்பது மெச்சத் தகுந்ததே.

6. இவர்களைப்போல் இதர வகுப்பாரும் சுயமுயற்சி யெடுத்து கல்விபயின்று வந்திருப்பார்களாயின் இந்தியாவைவிட மேலான தேசம் உலகில் வேறொன்றும் இருக்காதென்றே சொல்லலாம்.

7. இவர்களில் சிலர் உலகபபோக்கினால் கல்வி ஞானம் பெற்று உத்தியோகம்புரிய வேண்டுமென்ற ஆசை மேலீட்டினால் ஆரிய தர்மத்தை மறந்தவர்களாகி மற்றவர்களால் இகழப்படுகிறார்கள்.

8. பிராமண சகோதரர் இதர வகுப்பாரிடம் அன்பு கூர்வது ஆர்ய தர்மம். இதர வகுப்பார் அவர்களை இகழ்ந்தாலும் அன்பாயிருப்பதே ஆர்ய தர்மம். அதுவே ஜீவாத்மீக தர்மம்,

9. பழிக்குப் பழிவாங்குவது ஆர்ய தர்மமல்ல. இரக்க சிந்தையே ஆர்ய தர்மம். ஒரு அற்ப துவேஷத்தை வைத்துக்கொண்டு பிரவகுப்பில் ஒருவனை கெடுப்பதோ அல்லது தன்னயமாய் இருப்பதுவோ ஆர்ய தர்மமல்ல.

10. ஆர்ய தர்மத்தைக் கைக்கொண்டொழுகின அநேகரிருந்திருக்கிறார்கள். இருக்கிறார்கள். அதன்படி செய்தால் இந்தியநாட்டிற்கே மேன்மை.

11. அவர்கள் முற்போக்கடைந்த வகுப்பினராயிருந்தாலும் பிற்போக்கடைந்த வகுப்பாரையும் தங்களைப்போலாக்க கடமைப்பட்டவர்கள். அதுவே அவர்கள் இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்குச் செய்யவேண்டிய தர்மம்,

12. இக்கொள்கையை பிராமண சகோதரர்கள்

பெரும்பாலும் கவனித்து பிராமணரல்லாத மக்களின் கல்வி முன்னேற்றம் முதலியவைகளுக்கும் பாடுபடுவார்களாயின் தேசம் இன்னும் அடிமையாயிராது.

13. அவர்கள் மாத்திரம் படித்துவிட்டதால் தேசத்துக்கு நலமில்லை. பிராமணரல்லாத மக்களும் தங்களைப்போல் கல்வி பெற்றிருந்தால் தேச சேவைக்கு அதிக நலமாயிருக்கும்.

14. படியாத சகோதரனை படித்த சகோதரன் எப்படி ஒரு குடும்பத்தில் ஆதரிக்கவேண்டியதாயிருக்கிறதோ அப்படியே தேச சேவையிலும் நஷ்டம் ஏற்படும். இது இந்திய நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையாயிருக்கும்.

15. கல்வி அறிவு சகல மக்களுக்கும் ஏற்பட்டுப்போனால் பரஸ்பரஸ்நேகம் மக்களுக்குள் உண்டாகி தீண்டாமை என்னும் பேய் பறந்து போகும். ஜாதிப்பிரிவினைகள் மறக்கப்பட்டு போகும்.

16. அவர்களின் கல்விக்குத் தகுந்தபடி பெரிய உத்தியோகங்கள் பல கிடைத்திருந்தபோதிலும். சகல மக்களோடும் அன்யோன்யமாய்ப் பழக வேண்டுவது நாட்டிற்கு அவசியம்.

17. உத்தியோகஸ்தர்களுக்கு ஏழை இந்திய மக்கள் மீது அன்பு இருக்க வேண்டுமல்லாமல்

அதிகாரப்பிரியத்தை வகிக்கக்கூடாது. அதன் காரணம் பற்றியே மக்கள் வருந்துகிறார்கள்

18. பிராமணச் சகோதரர் சிலர் சில அற்பமான காரியங்கள் சிற்சில இடங்களில் செய்ததினாலே ஆர்ய தர்மம் குறைந்திருக்கிறது.

19. மேன்மக்கள் ஒவ்வொருவகுப்பிலும் இருக்கின்றார்கள் இருந்தபோதிலும் மேன்குலம் என்று சொல்லும் அவர்கள் பக்தி விநயமாயிருந்து பொது நன்மையைக் கருதுவதே சிறந்தது. அதுவே யாவராலும் கொண்டாடப்படும்.

20. உத்தியோகத்தை மாத்திரம் நினைத்து அவர்கள் படியாமல் தேச பொது நன்மைக்கு வருந்திபோராடப் படிக்க வேண்டும்.

21. தேச நன்மை ஆங்கில ஆட்சி போய் விட்டால் வந்துவிடுமென்று சொல்ல முடியாது ஒவ்வொருவரும் பாடு பட வேண்டுவது அவசியம் சுயமுயற்சி யாவரிடமுங் காணப்பட வேண்டும் அதின்றி நாட்டிற்கு நன்மை ஏற்படாது.

22. சோம்பித்திரிவது தேசத்தில் சகஜமாய் வந்துவிட்டது. சதா வேலைசெய்யாவிட்டாலும் மற்றவரை எதிர் பார்த்தவண்ணமேயிருப்பது கேவல

மானது. ஒவ்வொருவரும் பிரயோஜனமான ஒவ்வொரு தொழிலே, கையெடுக்கவேண்டும்.

23. நாட்டிற்கு நன்மை தரத்தக்க கல்வியைப் பயில்வதே ஆர்யதர்மம். சிலர் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதன் பலன் சீக்கிரம விளங்கும்.

24. பஹுஜனாேடு ஒற்றுமைப்படுவதே ஆர்ய தர்மம். அதுவே ஞான மார்க்கம். அதேபக்திமார்க்கம்

25. ஆர்யதர்மம் சுகிக்க அல்ல உத்தரிக்கவே மற்றவர்களால பாராட்டப் படுவதுவும் அதுவே.

26. பிராமணச் சகோதரர்கள் எந்தெந்த டிபார்ட்மெண்டுகளிலிருந்தாலும் இதர மக்களின் முன்னேற்றத்தையும் கவனிக்கவேண்டும். தங்களால் கூடுமானவரை இதர மக்களையும் தங்களோடு சேர்த்துக் கொண்டு வருவார்களாயின் தேச விடுதலைக்கு நன்மை. அல்லது பிரிவினைகளினால் சச்சரவுகள் அதிகம் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும்.

27. நமக்குள்ளே ஒருவருக்கொருவர் இகழ்ச்சிபண்ணிக்கொண்டு பொது ஸ்தாபனங்களோ கோவில்களோ எங்களுக்குத்தான் சொந்தம். அவர்கள் உள்ளேவரககூடாது. போகக்கூடாது" என்று கட்டுபாடுபடுத்துவதால் இந்தியநாடு அடிமையாகத்தானிருக்கநேரிடும்.

28. பிராமணர் பிராமணரல்லாத சகோதரர்களில் மேம்பாடடைந்த சிலர் ஒன்றுகூடி இந்திய நாட்டின் பிற்காலம் எதை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று தீர்மானிக்க ஆலோசிக்க வேண்டும். அதைப்பற்றி அவர்களுக்குள்ளே தர்க்கம் வரலாம். அன்பினால் அதை மேற்கொள்ளலாம்.

6 பிராமணரல்லாதார்

1- பிரமணால்லாத சகோதரர் இந்தியாவில் ஒரு பெரிய ஜனசமுகம். அவர்கள் முன்னேற்ற விஷயமாய் நல்ல வேலைகள் பலநடந்து வருகின்றன.

2. பிராமணர்களை நீக்கி இதர ஹிந்துக்கள், முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள் இதைச் சேர்ந்தவர்களாவர் ஆனல் முகமதியர்கள், கிறிஸ்தவர்கள், இந்த இயக்கத்தில் சேர்ந்தோ, சேராமலோ இருந்து அவரவர்களின் முன்னேற்றத்தில் கவலை எடுத்து வருகிறார்கள.

3. இப்பிரிவினையை ஒருவாறு அதிகம் படித்தவர்கள் (பிராமணர்கள்) அதிகம் படியாதவர்கள் (பிராமணரல்லாதார்) என்று கூறலாம். ஜனத்தொகைக்குத் தகுந்தபடி உத்தியோகம் கொடுபடவேண்டும் எனப் போராடி வருகிறார்கள்.

4. அதிகம் ஆங்கிலபாஷையைக் கற்றவர்களான சொற்பத்தொகையினரான பிராமண சகோதரர்கள் பற்பல உத்தியோகங்களில் அபரிமிதமாகக் காணப்படுகிறதாலும், அவர்களில் சிலரின் தன்னய செருக்கினாலுமே, அதிக படியாதவரான பிராமணரல்லாத கட்சி வரவரப்பலப்பட்டு வருகிறதாகத் தெரிகிறது.

5. பலப்பட்டு வெறும் பேச்சோடு இராமல் பிராமணர்களைப் போல் கல்வி அறிவில் ஊக்கம் எடுக்காதவரை பிராமணரல்லாத மக்களுக்கும், பொதுவாக நாட்டிற்கும் பிரயோஜனமில்லை என்றே சொல்லலாம்.

6. கல்வியே ஜீவன். அறியாமையே சாவு. பிராமண மக்களை எப்படிக் கல்வியானது முன்னுக்குக் கொண்டுவந்ததோ, அப்படியே பிராமணரல்லாத மக்களையும் முன்னுக்குக் கொண்டுவருவது நிச்சயம்.

7. சர்க்கார் உத்தியோகம் வகிக்க அல்லது சுயாதீனமாய் ஜீவனம் செய்யவும் நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைக்கவும் கல்வி கற்கவேண்டும்.

8. அப்போப்பட்ட சுயமுயற்சியின்றி சுய மரியாதை, சுய ராஜியத்தைப் பெறமுடியாது. சுய முயற்சியே ஒவ்வொரு சமுகத்திலும் காணப்பட வேண்டும்.

9. அமெரிக்கா சுயாதீனம் அடைந்தது சுய முயற்சியினாலே தவிர வேறல்ல. சுயமுயற்சியே அவர்களின் தற்கால முன்றேற்றத்துக்குக் காரணம்.

10. ஒவ்வொரு ராஜதானியிலும் அதிகமான ஜனத்தொகையை பிராமணரல்லாத சகோதரர் உடைத்தாயிருக்கிறதாலும், அவர்களுக்குள் அநேக உட்பிரிவுகளினால் சில சச்சரவுகள் ஏற்படுவதாலும் முன்னேறிச் செல்ல மார்க்கமில்லை.

11. மனிதனால் உண்டாக்கப்பட்ட பட்டங்களான முதலியார், பிள்ளை, நாடார், நாயுடு, ரெட்டியார், செட்டியார், தேவா, மூப்பனார் கோனார் முதலிய வைகளினாலும் இவர்களுக்குள் இன்னும் அநேக உட்பிரிவினைகளினாலும் ஒவ்வொரு இடங்களிலும் பொதுஜன முன்னேற்ற விஷயமாய் அதிக இடைஞ்சல் ஏற்ப்படுகின்றன.

12. இவைகள் நாளடைவில் நொறுக்கப்பட்டு பிராமணரல்லாதார் என்று ஏற்படும். இதன்மூலமே கல்வி அபிவிர்த்தி ஏற்படும். அதற்குப்பின், பிராமணர், பிராமணரல்லாதார் என்ற பிரிவுகளும் நீக்கப்பட்டு இந்தியர் என்ற சமதர்மம் ஏற்படும் அக்காலமே இந்திய நாட்டிற்கு விமோசனம் ஏற்படும் காலம்.

13. அப்படியே வடநாட்டில் ஹிந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கர்கள், புத்தர்கள் என்ற வித்தியாசங்களும் அதன் பிரிவுகளும் நீக்கப்பட்டு, இந்தியர் என்ற அபிமானம் ஏற்படும்.

14. அப்பொழுது தான் இந்தியா தேசத்துக்கு விமோசனம் உண்டாகும். முகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள் கல்வியிற் முற்போக்கு இன்னும் பிராமணர்களைப்போல் அடைந்திருக்கிறதாகத் தெரியவில்லை.

15. பிராமணரல்லாதவர் முன்னேற்றத்திற்கு சுயமுயற்சி கல்வியே அவசியம். இதிருந்தால் மற்ற

வைகள் தானே வரும். பிராமணர்களை உயர்த்தினதும் இம்முயற்சியே. விரோதமின்றி அன்போடு சகலவற்றையும் செய்யவேண்டும். ஒருவருக்கொருவர் தாங்கி நடக்கவேண்டும்.

16. பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்கு அந்த மஹான்கள் நல்ல வேலைசெய்து வருகிறார்கள். அவர்கள் இனி கல்வி மதுவிலக்கு முதலியவைகளை ஆதரிக்கக் கிராமங்கள் தோறும் பிரச்சாரங்கள் செய்தால் நலமாயிருக்கும். நடமைதா உத்தியோகத்துக்குக் கொண்டுவரும் கலவி நாட்டிற்குத் தேவையில்லை.

17. சோம்பல் பொறாமை கோபம், தன்னயம், துன்பம் இவைகளை அகற்றி ஜீவாத்மீக தர்மத்தைக் கைக்கொண்டு வரவேண்டும்.

18. அப்பொழுது தான் ஒவ்வொருவரும் தாது சக்தியை அபரிமிதமாய்ப் பெறமுடியும். அதுவே ஜீவன் அதில்லாமல் தேசசேவை செய்யமுடியாது. லேகியம் சாப்பிட்டுவிட்டால் தாதுசக்தி வந்துவிடுமென்றெண்ணுவது தவறு.

19. அமெரிக்கா தேசம் இச்சக்தியை பெற்றதினாலே வரவர முன்னேறிச் சென்று வருகிறது. அதின் மக்களின் முயற்சி உலகமெங்கும் தொனிக்கிறது.

20. கர்நாடக சில கோட்பாடுகளை நீக்கவேண்

டும். தற்கால நாகரீகத்துக் கேற்றவாறு காரியங்கள் செய்ய வேண்டும்.

21. யந்திர உலகமே அமெரிக்காவை செழிக்கச் செய்தது. அதினல் காலம அதிக மிச்சமாகும். காலங்கள் நம் தேசத்தில் அனுவசியமாய் கழிக்கப் படுகின்றன.

22. பிராமணரல்லாதாரின் முன்னேற்றத் திற்கு வரிவாங்குகிற கவர்ண்மெண்ட் பொருள் உதவி செய்யவேண்டும். படித்தப்பிராமணரலலாத சகோ தரர் ஏனோதானோவென்றிருக்கிறது சரியல்ல. தலைவர் கள் முன் வரவேண்டும். பிற்போக்கான மக்க ளுக்கு பாதி சம்பளத்துக்கு கல்வி அளிக்கப்பட வேண்டும்.

23. அநேக பாடசாலைகள் ஏற்பட்டு, கல்வி, ஒற்றுமை, முன்னேற்றத்தைப் பற்றி பல இடங் களில் பிரசாரங்கள் செய்யப்பட வேண்டும.

24. மதவிஷயம் கோவில் விஷயங்களில் அனு வசிய செலவுகளை நிறுத்தி கல்விற்குச் செலவு செய்ய மக்கள் தூண்டப்படவேண்டும.

25. நான் உயர்ந்த ஜாதி, நீ தாழ்ந்த ஜாதி என்று பிராமணரல்லாதாரிடம் இன்னும் இருந்து வருமாயின், ஜனசமுகம் முன்னுக்கு ஒருபோதும் வராது.

26 இது மூலமே பின்சந்ததியும் கஷ்டப்பட்டு அடிமைபாகவேயிருக்கும். ஆகையால் சமத்வம், சகோதரத்வம் ஏற்படுவதற்குரிய கல்வியை நாடெங்கும் பரப்பவேண்டும்.

---

7. முகம்மதியர்

1 இந்த சமுகம் சுமார் 8 கோடி ஜனத்தொகையை உடையதாயிருந்தும் இதன் முன்னேற்றம் கல்வியில் அவ்வளவு திருப்தியில்லை.

2 தங்கள் முகம்மதுநபி அவர்களால் ஏற்பட்ட கொரானை ஓதுவதும் மற்றும் மார்க்க சடங்காச்சாரங்களிலும் அதிக பற்றுதலுள்ளவர்கள்.

3 இந்த சமுகத்திலும் அநேக பிரிவுகளுண்டு இருந்தாலும் ஒற்றுமை கொஞ்சமேனும் இல்லையென்றும் சொல்லமுடியாது.

4 வட இந்தியாவிலிருக்கும் முகம்மதியர்கள் எல்லா விஷயங்களிலும் தென்னிந்திய முகமதியரை விட முயற்சி எடுக்கிறார்கள்.

5. தென்னிந்திய முகம்மதிய சகோதரர்கள் சிறுவயதிலேயே கொரான் ஓதியபின் சொற்பம் வாசித்துவிட்டு அயலிடங்களில் வியாபாரங்களில்

ஈடுபட்டு விடுவதால் அதிக கல்விபெற சந்தர்ப்ப மில்லாமல் போய்விடுகிறது.

6 இருந்தபோதிலும் கல்வியில் தற்சமயம் ஊக்கங்கொண்டு பயில ஆரம்பிக்கிறது மெச்சத் தகுந்ததே.

7 இந்தியதேசத்திலே வியாபாரத்தில் முன்னேறி நிற்கும் ஒருபெரிய சமூகம் என்றே சொல்ல வேண்டும். இதில் இவ்வளவு தேர்ச்சி ஏற்பட்டது இவர்களின் ஒரு தைரிய சிந்தையே.

8 அதிகமாக மார்க்க காரியங்களில் செலவு செய்கிறார்கள். ஏழைகளுக்கு கொடுப்பதிலும் பின்னடையமாட்டார்கள். தானம் அளிப்பது மார்க்கத்தின் போதனையே.

9 இதன் காரணமாக வேலைசெய்து சாப்பிடக் கூடியவர்கள் கூட கூட்டம் கூட்டமாக தர்மம் வாங்க புறப்பட்டு விடுகிறார்கள். இது நல்லதல்ல.

10 சமூகத்தொண்டர்கள் இது விஷயமாயும் மற்றும் சில சீர்திருத்த விஷயமாயும் முயற்சி எடுத்து வருகிறார்கள்.

11 தேசமுன்னேற்றம், பொதுஜன முன்னேற்றம் இவைகளில் அதிக முயர்ச்சி ஆங்காங்கே எடுத்து வருகிறார்கள். அனேக சங்கங்கள்நிருபித்து அதன்

மூலம் நல்ல உதவிகளை ஏழைகளுக்குக்கொடுத்து வருகின்றனர்

12 இவ்வளவு சீரும் சிறப்புடனுமிருக்கும் இந்தசமுகத்தில் அநேக ஏழைகளுமுண்டு அவர்கள் விஷயமாக இன்னும் அநேக காரியங்கள் நடத்தப் படவேண்டும்

13 கடவுள் ஒருவரே அவரையே தொழவேண்டும் மகமமது அவரால் கடைசியாக உலகத்திற்கு அனுப்பப்பட்ட நபி என்ற சித்தாந்தத்தைக் கைக்கொள்ளுடவர்கள்.

14 ஈசா (கிறிஸ்து) அவருக்கு முன்வந்த நபியென்றும் சொல்லுகிறார்கள்.

15 இதன காரணம்பற்றியும் (கிறிஸ்தவர்கள்) பழைய ஏற்பாட்டில் காணப்படும் மோசே, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது, சாலமோன் முதலியவர்களை நபி மார்களாகவும் பாராட்டுவதால் முகம்மது மார்க்கத்துக்கும், கிறிஸ்து மார்க்கத்திக்கும் ஒருவாறு ஒற்றுமையே.

16 பழைய ஏற்பாட்டின் சடங்காச்சாரங்களை முகம்மதியச்சகோதரர்கள் கைக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்தவசகோதரர்கள் அச்சடங்காச்சரங்களைக் கைக்கொள்ளுவதில்லை. இதுதான் இவ்விரு சமுகத்திற்குமுள்ள வித்தியாசம்.

17 தென்னாட்டில் முகமதியர்களுக்கும் இந்துக் களுக்கும் ஒற்றுமையே. வடநாட்டில அடிக்கடி சச் சரவே. ஒருவரையொருவர் சரிவர அறியாததே. இதற்கு காரணம்.

18 ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை விஷயமாக அநேக பெரியோர்கள் வேலைசெய்து வருகிறார்கள். இது நாட்டின் முன்னேற்றத்திற்கு அறிகுறி.

19 இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு அவ் வொற்றுமை அவசியம். இருதிறத்தாரும் நாம் எச்சம யத்தை சேர்ந்தாலும் நாமெல்லாரும் இந்தியர்கள் என்று நினைக்கும்பட்சம் சச்சரவுகள் பலஏற்படாது.

20 எல்லாவற்றிற்கும் கல்வியே பிரதானம், கல்வி இல்லாதநாட்டில் சச்சரவுகள் ஏற்படக் கொண்டுதானிருக்கும்.

21 முகம்மதியர் கல்வியில் பிற்போக்கான வகுப்பாரானதால் சர்க்கார் பாடசாலைகளில் அரை சம்பளத்திற்கு கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்திருக் கிறார்கள்.

22 இருந்தாலும் அவர்களுக்கு கல்வியில் சரி வர ப்ரீதியை உண்டாக்க கூடிய ஆட்களைக்கொண்டு கூடுமானவரை தேர்ச்சிபெற்ற மகமதிய சகோதரர் களைக் கொண்டே கல்விகற்று கொடுக்கும் பட்சத்

தில் நன்ருய் கல்வியில் முற்போர்க்கடைந்துவிடு வார்களென்பதில் சந்தேகமில்லை.

23 அப்படியின்றி பெயருக்காக 1/2 சம்பளமென்று சர்க்கார் பறை சாற்றிவிடுவதால் சமூகம் கல்வியில் தேர்ச்சி பெற ஒருபோதும் மார்க்கமில்லை.

24 ஏழைமுகம்மதிய மாணவர்களுக்கு சம்பளமின்றியே மெட்ரிகுலேஷன் வரையாவது கல்வி கற்பிக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய வேணடும்.

25. முகமமதியர் கலவிகற்க அவ்வளவு தீக்ஷண்யம் படைத்தவர்களல்ல வென்று சிலர் நினைப்பது அறியாமையே தவிர வேறல்ல.

26. சிறுவயதில் கொரானை சரிவர ஓதியபின் 22ம் வயதில் B. A. பட்டம் பெற்றவர்களும் பெரிய மேதாவிகளும, தத்வஞானிகளும் அச்சமுகத்தில் உண்டு.

27. 50 வயது வரை கல்வியில் நாட்டமுடையபலரிருக்கின்ருர்கள். சிலர் சிறுவயதிலேயே தொழிலில் பழக பாடுபடுவதாலும் மேலும் 8, 9, வருஷங்களில பிரயோஜனமில்லாத படிப்புகள்மேல் நாட்டமில்லாததிலும், குடும்ப செலவின சம்பந்தமாகவும், கல்வி சரிவரகற்காமல் அயல் நாடு போக நேரிடுகிறது.

28. போய்வந்தபின் அநேகர் அதிக கவலைப் பட்டு அதிகசெலவு செய்து இரண்டொரு வருஷம் படித்துவிட்டு திரும்பவும யாததிரை போகிறார்கள். அநேகர் தபால்படிப்பு சாலைகளில் தொழில் செய்து கொண்டே பயின்று வருகிறார்கள்.

29. படித்த முகம்மதிய மாணவர்களிலனே கர் சர்க்கார் ஸ்தாபனங்களில் உத்தியோகம் கிடைக் காததால் அயல் நாட்டிற்கு வியாபார விஷயமாய் போய்விடுகிறார்கள்

30. பிற்போக்கான மககளை உயர்த்த பிரயாச படுகிறோம என்று சொல்லும் சர்க்கார் இதன்விஷய மாக அதிக கவலை எடுக்கவேண்டும்.

31. படித்த இரண்டொருவருக்கு பெரிய உத்தியோகம் கொடுத்து விடுவதால் 8 கோடி ஜன சமூகத்தை சர்க்கார் திருப்தி செய்து விட்டோ மென்று நினைப்பது சரியல்ல.

32. சொற்பம் வாசித்திருந்தாலும் சர்க்கார் உத்தியோகங்கள் வளங்கபடவேண்டும. இவர்களிலநே கரை மேநாடுகளுக்கு தொழில் பயிற்சிக்க அனுப்ப வேண்டும்.

33. இந்திய நாட்டில் சுயாதீன சிந்தையை அடிப்படையாகக்கொண்ட இது ஒரு சமூகம். இவர்கள் சர்க்காரை கேட்பதைவிட ஏதாவது ஒரு தொழில்

செய்யலாமென்று நினைக்கக்கூடியவர்கள்.

34. இதுதான் சாக்குஎன்று சர்க்கார் நினைப்பது சரியல்ல. இது விஷயமாக முகம்மதிய அன்பர்கள் பொது ஊழியஞ்செய்வதற்கு முன் வர வேண்டும்.

35. படித்துவந்த முகம்மதிய நண்பர்கள் தங்களைப்போல் இதரமக்களையும் கல்வியில் தேற்சி பெற பிரயாசப்பட வேண்டும்.

8 கிறிஸ்தவர்கள்.

1. தேசத்தில் கிறிஸ்துமார்க்கம் சுமார் 50 லக்ஷம் ஜனத்தொகையுடைய ஓர் மார்க்கமாயிருக்கிறது.

2. இம் மார்க்கத்தை பிரபல்யப்படுத்த கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இந்தியாவிலிருக்கும் மிஷனெரிமார்கள் இந்திய கிறிஸ்தவ சகோதரர்களுடன் வேலைசெய்து வருகிறார்கள்.

3. மேநாடுகளிலிருந்து உதவிகள் பல ஒரு காலம் வந்திருந்தாலும், தற்காலம் இந்திய கிறிஸ்தவர்கள் சுயாதீனமாகவே காரியங்கள் பல செய்து வருகிறார்கள்.

4. மிஷனெரிகளில் அனேகர் கல்வி விஷயமாய் அருமையான வேலைகள் பல செய்திருக்கிறார்கள். ஆனால் இந்திய கிறிஸ்தவர்களை அவ்வளவு முன்னுக்கு வந்திருக்கிறதாகவும் தெரியவில்லை.

5. திருநெல்வேலி ஜில்லாவில் பெரும்பாலும் நாடார்களே கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்து, அவர்களிலனேகர் இந்தியா தேசமுழுவதும் மார்க்கத்திற்காக மிஷனெரிகளோடு ஒத்து உழைத்து வந்திருக்கிறதாகத் தெரிகிறது.

6. இப்படி கிறிஸ்துமார்க்கம் புகுந்து மிஷனெரிகளிடம் வேலை செய்தவர்களிலனேகருக்கு தங்கள் சமூக பிரச்சினைகளிலீடுபட சந்தர்ப்பங்களில்லாமல்போய்விட்டது.

7. இம் மார்க்கத்திலுள்ளவர்களில் சிலர் பெரிய அறிவாளிகளாயும், தத்துவ சாஸ்திரிகளாயும் இருக்கிறார்கள். மெச்சத்தகுந்ததே.

8. ஆனால் பிரிவினைகள் இவர்களுக்குள்ளே தாண்டவமாடிக் கொண்டே வந்திருக்கிறது. காரணம் அறியாமையே.

9. இப்பிரிவினைகளை நிவிர்த்தி செய்து தென்னிந்திய ஐக்யசபை உண்டுபண்ண அநேக கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

10. எவ்வளவு விசேஷமான காரியங்கள் மார்க்கத்தில் நடைபெற்றாலும் இந்திய கிறிஸ்தவர்களின் முன்னேற்றத்தைக் கவனிக்காவிடில் பிரயோஜனப்படாது. தரித்திரம் நீங்காது.

11. இந்திய கிறிஸ்தவ சமுகத்திற்கு கல்வி அறிவு அவ்வளவு திருப்திகரமாய் அளிக்கப்படவில்லை அதன் மக்களிலனேகர் அடிமைகளாகவே யிருக்கின்றார்கள்.

12. மார்க்க பிரச்சினைகளுக்காக எவ்வளவோ லட்சக்கணக்கான திரவியம் தேசத்தில் செலவு செய்யப்பட்டிருந்தாலும் மக்களின் அறிவை விர்த்தி செய்ய செலவு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

13. அறிவின்றி பரம ஞானமேது? அறியாமையே சாவு. கோடிக்கணக்கான மக்களுக்கு கல்வியைக் கொடுப்பதே ஞான மார்க்கத்துக்கு அடிக்கோல்.

14. இம்மார்க்கத்தில் மக்களுக்குள் ஜாதிவேற்றுமையில்லை என்று சொல்லமுடியாது. இருந்துதான் வருகிறது. மிஷனெரிகள் இதுவிஷயமாய் அவ்வளவு சிரத்தைஎடுத்ததாக தெரியவில்லை.

15, இது நாட்டிற்கு அவசியமில்லை என்று மிஷனெரிகள் கண்டால் நன்மையே. அதிருப்பது

அவர்களுக்கு ஒருவிதத்தில் சௌகரியமாயிருப்ப தாகவும் தெரிகிறது.

16. மார்க்கத்திலுள்ள எண்ணிறந்த பிரிவினைகளை ஒற்றுமையாக்க வேண்டுமென்று ஒவ்வொரு இடங்களிலும் பேச்சுகள் நடத்தி வருகின்றனர்.

17. அவ்வொற்றுமையை பற்றி காண்பரன்ஸ்கள் பல கூட்டுவதைவிட்டு, ஒவ்வொரு மிஷன்காரரும் அந்தந்த மிஷனிலுள்ள ஏழை மக்களின் கூப்பாடுகளை முதலாவது கவனித்து அறியாமையை விலக்குவது அதைவிட மேலானது.

18. மார்க்கம் மார்க்கம் என்று பெயரை வைத்துக்கொண்டு, மக்களின் அறியாமையை நீக்க வழி தேடாமலும், தரித்திரத்தைப் போக்க வழி தேடாமலிருக்கவுமா?

19. காணிக்கைகளை வாங்குவதும் மிஷன்களுக்கு கட்டடங்கள் பல கட்டுவதும், 2000ரூ பெறுமான சொத்துக்களை ஏழைகளிடமிருந்து ரூ 75-க்கு வேதம் படித்துத்தரலாமென்று அடமானம் வாங்குவதும் அடமானம் திருப்பபோனால் பட்டா எங்களுக்கு ஆகிவிட்டது என்று சொலவதும மார்க்கமா?

20. ஒருகாலத்தில் இனாமாக ஏழைகளிடமிருந்து கோவிலுக்கென்று நிலங்களை வாங்குவதும், பின்அதை பணமிருப்பவர்களுக்கு கிரயஞ் செய்ய

ஆரம்பித்து ஏழைகளை இச்சிப்பதும் மார்க்கமா?

21. "மரங்கள் வளர்ந்தபின்னர் நீங்கள் அனுபவித்துக்கொள்ளலாம் இப்பொழுது நாங்கள் பட்டாவாங்குவதற்கு தடங்கல் செய்யவேண்டாம்" என்று சொல்லிவிட்டு காரியம் முடிந்தவுடன் அப்படி ஒன்றும் சொல்லவில்லையே, அதைப்பற்றித் தெரியாது என்று சொல்லிவிடுவது மார்க்கமா?

22. அப்படி ஏமாற்றப்பட்ட குடும்பம் கிறிஸ்து மார்க்கத்தை விட்டு திரும்பும்படி அவ்வளவு பிடிவாதமாய் கிலப்பேய் பிடித்தாடுவது மார்க்கமா?

23. இவ்வாறு செய்து ஒரு ஜாதியை ஒடுக்கி அடிமைப்படுத்தி, அச்சாதியின் மூலமாய் சொகுசு கொண்டாடி, அச்சாதியின் மக்களை படிப்பில் அவ்வளவு முன்னுக்கு வரவொட்டாமலும் சதா அடிமைகளாக வைத்து இருப்பதும் மார்க்கமா?

24. உலகம் கண்டு நடுங்கும் சில வித்வ சிரோன்மணிகளை அவர்கள் ஏற்படுத்தின கலாசாலைகளில் சொற்ப சம்பளத்திற்கு போட்டு வாட்டி பின் அவர்கள் சமூகத்தைப் பற்றி கேவலமாய் எழுதுவதும் மார்க்கமா?

25. கிறிஸ்து மார்க்கம் இந்தியா தேசத்தில் முன் செல்லாததின் காரணம் சில மிஷனெரிமார்களின் தன்னயச் செருக்கும், படாடோபமுமே தவிர வேறல்ல.

26. இந்திய நாட்டிலே கிறிஸ்து மார்க்கத்திற்கு பிறப்பிடமான திருநெல்வேலி ஜில்லாவில் நடக்கும் விபரீதங்களை எழுத வேண்டுமென்றால் இடம் போதாது.

27. சுயநலத்தோடு மக்களின் அறிவீனத்தினால் சுகித்துக் கொண்டு பிரிவினைகளால் ஆட்சி செய்து காரியஞ்செய்வதான ஸ்தாபனங்கள் அழியும்படியான காலம் நாட்டிற்கு வந்துவிட்டது.

28. இந்திய கிறிஸ்தவர்கள் விழித்துக்கொள்வார்களா? அல்லது இன்னும் அடிமைத்தனத்திலிருந்து கொண்டுதான் இருப்பார்களா?

29. விரோதத்தை வைத்துக்கொண்டு எந்த சமூகமும் வளர்ச்சி பெறாது. அன்பை வைத்துக்கொண்டே சமூக வளர்ச்சிக்குப் பிரயாசப்பட வேண்டும்.

30. உலகில் கிறிஸ்து மார்க்கம் பிரபல்யமடைந்ததற்குக் காரணம் அன்பே. கிறிஸ்து ஒருவரையும் விரோதிக்கவில்லை. சகலரையும் நேசித்தார். இப்பொழுது உலகத்திலே பெரிய ஜனத்தொகையை கொண்ட ஒரு மார்க்கமாயிருக்கிறது.

9 விபசாயம்.

1. இந்தியா விபசாயத்துக்கேற்ற நாடு. ஆனால் விபசாயிகளில் விபசாயத்தை விருத்தி செய்பவர் சிலரே, ஏனென்றால் வரிமுதலான வைகளால் பயிரிடுகிறவர்கள் கஷ்டமடைகிறார்களெனத் தோன்றுகிறது.

2. பயிரிடுகிறவனின் கஷ்டம் தீர்ந்தால் காட்டில் பஞ்சமில்லை. அப்போதே படித்தவரும் படியாதவரும் இத்தொழிலை கைவிடுப்பார்கள்.

3. சர்க்கார் வேலையை உத்தேசித்தே எல்லாரும் படிக்க ஆரம்பிக்கின்றனரே யொழிய, நாட்டிற்கும் ஜன சமூகத்திற்கும் வேலை செய்ய படிக்க வருவதாகத் தெரியவில்லை.

4. மிதமிஞ்சிய வரிப்பணத்தைக் கொடுத்து கஷ்டப்பட்டு வாடியிருக்கும் சமுசாரியின் பிள்ளைகளுக்கும், ஒடுக்கப்பட்டிருக்கும் 6 கோடி மக்களின் பிள்ளைகளுக்கும் விமோசனமெப்பொழுதோ வென்றுதான் நமக்குத் தெரியவில்லை.

5. உயர்தரக் கல்வி கற்றாலும் இந்திய நாட்டினர் விபசாயத்தில் சிரத்தை அவசியம் எடுக்க வேண்டும். தேசமக்கள் போஷிக்கப் படுவதற்கு இதுவே முதல் வழியாகும்.

6. ஏராளமான பூமிகள் பண்படுத்தப் படாமல் பாழாய்க்கிடக்கின்றன. யாரை குறை கூறுவதென தெரியவில்லை. பணமும், முயற்சியும் தேவை.

7. கிருஷிகளின் வயிற்றில் அடிப்பது தேசத்தின் முன்னேற்றத்தை எதிர்ப்பதற்குச் சமானம். அநேக கிருஷிகளை கிலமை கவலைக்கிடமாயிருக்கிறது. கடனில்மூழ்கி நிலத்தை இழந்து நிற்பவர் எத்தனைபேர்?

8. 150 கோடி ரெவினியூ வசூல் செய்யும் கவர்ன்மெண்டார் விவசாய அபிவிர்த்திக்கு என்ன வேலை செய்கிறார்களென்று தெரியவில்லை.

9. கிராமங்கள் தோறும் விவசாய ஆராச்சிகளைப்பற்றி மக்களுக்கு எடுத்துக்காட்டுவது நலம். படித்தும் வேலையின்றி சும்மாயிருப்பவர்கள் இத்தொழிலை கவனிக்கலாம்.

10 நிலத்தில் வரும்படி போதுமானபடி கிடைக்காததால் அநேகர் கிருஷித்தொழிலை வெறுக்கிறார்கள். காரணம் அதற்கு வேண்டிய அநுபோகப்படிப்பு இல்லாததாலும், வரிவிகிதம் அதிகப்பட்டதாலுமே தவிரவேறல்ல.

11. சர்க்கார் இதுவிஷயமாகக் கவனிப்பு அதிகம் எடுக்க வேண்டும். கிராம கீழ்தர உத்தியோகஸ்

தரீன சபயளய உயாததகப்படட வேண்டும்.

12. கிருஷிகர்கள் நல்ல நிலை, கெடடநிலம் என்று சிக்கிம வேற்றுமைப்படுத்தி விடுவதைவிட கெட்ட நிலத்தையும் பாருபாடு செய்வதே அதிக உத்தமம். உழைக்க சோம்பல் பட்டால் முன்னேற முடியாது.

13. கெட்ட நிலத்தை நலல நிலமாக்கப் பிரயாசப்படாமலிருப்பது கெட்ட பையனை நல்ல பையனாக்கப் பிரயாசப் படாமலிருப்பது போலாகும்.

14. இந்திய நாட்டிலிருக்கும் தரிசு நிலங்கள் மேல் நாடுகளிலிருந்தபோயாலுல என்ன விதமான வேலைகள் நடக்கும்? அதேமாதிரி நம் நாட்டார் செய்யும் படசம் அதிக விசேஷமாகப் பலன் பெறலாம்.

15 வீட்டிலிருந்து கொண்டே நிலம் நன்றாய் விளையும் என்று வீண் நினைவுகள் கொண்டிருப்பது பிரயோஜனபபடாது.

16. கிருஷிகளுக்கு விளைவு கண்டாலும், காணவிட்டாலும தீர்வையை கவர்ன்மெண்டார் பலவந்தப்படுத்த வசூல் செய்வது தர்மமல்ல.

17. தற்காலம் வசூலிக்கும கிஸ்தியை குறைத்து ஏழை கிருஷிகளுககு சர்க்கார் உதவிசெய்ய முன் வரவேண்டும்.

18. விவசாய டிபார்ட்மெண்டார் எல்லா கிராமங்களிலும் போய் பூமியை நன்கு பண்படுத்தக்கூடிய விதிகளை எடுத்துச் சொல்லி வருவது நலம்.

19 அவர்கள் கிருஷிகர்களுக்கு விளங்கும்படியான எளிய பாஷையில் சில பிரதிகளை அச்சிட்டுக் கொடுப்பது நலம்.

20. கிருஷித்தொழிலைப்பற்றி கிராமபாடசாலைகளில பிள்ளைகளுக்கு கற்பிக்க ஏற்பாடு செய்வதால் அதிக நன்மை ஏற்படும்.

21. அநேக கிருஷிகர் பூமிக்கு ஓய்வு கொடுக்காதபடி சதா அதை பலஹீனப்படுத்தி விடுகிறார்கள். நமக்கு எவ்வாறு இளைப்பாறுதல் அவசியமோ அவ்வாறே பூமிக்கும் அவசியமென்று கருத வேண்டும்.

22. நிலத்துக்கு வேண்டிய எரு முதலியன போடாதபடி இரண்டு மூன்று தரம் விளைவிக்க ஆசைப்படுவது நஷ்டமே.

10 கைத்தொழில்.

1, கைத்தொழில் இல்லாத நாடு நாடல்ல. அது நாடு என்றே சொல்லலாம்.

2. கைத்தொழிலே இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் நாடுகளை முன்னேற வைத்தது.

3. தனவந்தர்கள் கூட்டுசெலவுகள் மூலம் அருமையான கைத்தொழில் சாலைகள் நடத்தலாம்.

4. முதல் நஷ்டமாய்ப் போய் விடுமென்று அநேகர் பயப்படுகிறார்கள் தேர்ச்சிபெற்ற ஆட்களை வைத்து நடத்துவதால் முதல் ஒருபோதும் நஷ்டமடையாது

5. வடஇந்தியா, தென இந்தியாவைவிட சிற்சில கைத்தொழிலில் முன்னேறியிருக்கிறதெனச் சொல்லலாம்.

6. ஒருவர் செய்த கைத்தொழிலை செய்வதைவிட நாட்டிலவதரிக்காததும் ஜனங்களுக்கு பிரயோஜனப்படக் கூடியதுமான நூதன கைத்தொழிலைச் செய்வதே நலம்.

7. நமது தேசத்துக்குரிய பொருட்களை செய்வதோடு, அயல் தேசங்களுக்கும் அனுப்பும்படியான தொழிலிலும் பழகிவரவேண்டும். அதற்கு வேண்டிய சாமான்கள் நம் தேசத்திலிருந்தே அயல் நாடுகளுக்குப் போகின்றன.

8. இந்திய தேசவாசிகளிலநேகர் ஒருதொழில் கூடம் ஆரம்பிக்கும் போது, பயத்தினாலும், சந்தேகத்தினாலும் பின்வாங்கிப் போகிறார்கள்.

9. முயற்சியுடையவருக்கும் கால வித்தியாசங்களைக் கவனித்துத் தொழில் செய்பவருக்கும், நஷ்டம் ஒருபோதும் ஏற்படாதென்றே சொல்லலாம்.

10. கைத்தொழில் செய்வதும், வியாபாரஞ் செய்வதும், உலக மக்களின் சௌகரியத்தை பொறுத்து செய்ய வேண்டியதேயொழிய இரண்டொரு வருஷங்களில் அதிக சம்பாத்தியத்தையடைந்து விட வேண்டுமென்று நினைப்பது தவறு.

11. உலகத்திலே பெரிய பணக்காரராய் இருக்கும் ஹென்றிபோர்டு தன் சுயமுயற்சியாலே உலகில் பெரிய சீமானாக வந்திருக்கிறார். காரணம், அவர் பொதுஜன சௌகரியத்தையும் நாளாவட்டத்தில் கவனித்ததாகத் தெரியவருகிறது.

12 கல்லூரிகளிலிருந்து வரும் மாணவர்கள், சொற்ப சம்பளத்தில் சர்க்கார் உத்தியோகத்திற்கு போவதைவிட கைத்தொழிலைப் பெருக்க நினைப்பது மேலானது. மேலும் சர்க்காரில் எல்லாவற்றிற்கும் வேலை கிடைப்பது கடினமே. கைத்தொழிலில் முன்னேற்றமடைந்த நாடுகளின் சரிதைகளை மாணவர்களும் தொழிலாளிகளும் வாசித்தறியவேண்டும்.

13. மெட்ரிகுலேஷன் வரை வாசித்துப் பின் B.A. M.A. பட்டங்கள் வகித்து சரிவர குடும்ப நிர்வாகஞ்செய்ய முடியாமல் வேலையின்றி அலைவதைவிட கைத்தொழில் பயின்று சுயாதீன ஜீவனம் செய்வது மேல்.

14. சுயமுயற்சியே இந்திய நாட்டின் கைத்தொழிலை அபிவிர்த்திக்குக் கொண்டுவரும். அதுவே உயிர்.

15. சுயமுயற்சியில்லாத மனுஷன் ஜனசமூகத்துக்கே பெருத்த நஷ்டம். தேர்ச்சி பெற மனுஷன் இஷ்டப்பட்டால், அவன் தாது சக்தி குறையும் பல்வேறு வழிகளைக் எளிதில் கண்டடையக்கூடும்.

16. அமெரிக்கா, இங்கிலாந்து ஜெர்மனி முதலிய தேசங்கள், இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் எவ்வாறு இருந்தன? கைத்தொழில் சாலைகளே அவைகளின் முன்னேற்றத்துக்கு காரணம்.

17. பல கைத்தொழில் சாலைகள் கெடுவதற்குக்காரணம் தன்னய ஆவியும், சோம்பலுமே தவிரவேறல்ல.

18. அயல் நாட்டு சாமான்களை பஹிஷ்கரிக்குமுன், விடாமுயற்சியுடன் நாட்டிற்குத் தேவைப்பட்ட காரியங்களையும், நம் நாட்டிற்குச் செய்யவேண்டிய வழிகளையும் தேடி கண்டுபிடிக்க வேண்டும்.

19. அப்பொழுது தான் அந்நியநாட்டு சமான்களை இதுவரை வாங்கி விற்றுக் காலங்களிக்கும் மக்களுக்குவேலை ஏற்படும்.

20. அந்தந்த ஊரிலோ, பட்டணங்களிலோ உள்ள உத்தியோகஸ்தர்களும் தனவந்தர்களும் இது விஷயமாய் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

21. கைத்தொழில சாலைகள் நாட்டில் அதிகமாக அவதரிக்க வேண்டும். திறமையுள்ள பிச்சைக்காரர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். பிச்சை எடுப்பது நாட்டில் ஒழியவேண்டும.

22. மேநாட்டில் பிச்சைக்காரர்கள் நம நாட்டிலிருப்பது போல், சர்வசாதாரணமலல. காரணம் கைத்தொழிலின சிறப்பே. கைத்தொழில் முறைகளை வாசிக்க ஸ்தாபனங்கள அந்தேசங்களில் ஏராளம் உண்டு. நம நாட்டில் அவ்வளவு கிடையாது.

23. கவர்ன்மெண்டார் கைத்தொழிலை விர்த்தியாக்கக்கூடிய கிருத்தியங்களில் அதிக சிரத்தை எடுக்க வேண்டும்.

24. மக்களிடம கைதொழிலில பிரிதி யிலலை என்று சாக்குப் போக்கு சொலவதில் பிரயோஜனமில்லை. மக்களின் தரித்திர திசையே அதற்கு காரணம்.

25. ஆகையால் பொது சொத்தாகிய கவர்ன்மெண்ட் திரவியம், நாட்டிற்குத் தேவையில்லாத

காரியங்களில் செலவு செய்யப்பட்டும் விநியோகஞ் செய்வதைத் தடுத்து தொழில் முறைகளை பலநாட்டில் அவதரிக்கும் படி சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

26. மேனாடுகளுக்குச் சென்று அவ்விடத்துத் தொழில் முறைகளைக் கற்றுவர சிலருக்குத் திரவிய சகாயம் கொடுத்து அனுப்பப்படவேண்டும்.

27. அவர்கள் திரும்பினவுடன் கைத்தொழில் சாலைகள் பல ஏற்படுத்தி அவர்களை ஆதரிக்க முன்வர வேண்டும்.

11 வியாபாரம்.

1. இது தொழிலோடு சம்பந்தப்பட்டதே. பொருட்கள் பல செய்து அளிக்கப்படாமலிருந்தால் பிரயோஜனமில்லை. எல்லா தேச முன்னேற்றத்திற்கும் வியாபாரம் அவசியம். காலங்களின் மாறுபாட்டைக் கவனித்து வியாபாரஞ் செய்வது மேல்.

2. வியாபாரிகளின் தன்மை எப்படியிருக்க வேண்டுமென்று தெரியாத ஒருவன் திடீரென வியாபாரியாய்த் தோன்றி சம்பாதித்து விடலாமென்று நினைப்பது கனவே.

3. தேசத்தில எவராகுலும் வியாபாரியாய் வந்துவிட ஆசிக்கிருர்கள். அதற்கு கலவி, அறிவு; பொது அறிவு, அவசியம்.

4. வியாபாரி முதலிலேயே அதிக லாபத்தை அடைந்துவிட முடியாது. ஒவ்வொரு முறையிலும் அநுபோகம் அத்யாவசியமானது.

5. அநுபோக மடைவதற்கு சயமுயற்சி அத்யாவசியம் அதன்றி வியாபாரம் தொடஙகி பலர் நஷ்டமடைந்து தவிக்கிருர்கள்.

6. முயற்சியின்றி அதிஷ்டமில்லாமல் போய் விட்டதென்று சொல்வது சரியல்ல. மனுேதர்ம சாஸ்திர விதிகள் கவனிக்கப்படவேணடும்

7. வியாபாரதட்பஙகளைக கற்றுக் கொள்வதற்கு பல இடஙகளுக்கும போய் அவ்விடத்து காரியா காரியஙகளை கவனிக்க வேண்டும்.

8. "வெளியூர் போய் வரவுமாட்டேன். உள்ளூரிலே தானிருப்பேன. லாபம் வந்துவிடவேண்டும" என்று நினைப்பது இஙகாசரீககாலத்தில் சரியல்ல உள்நாட்டு வியாபாரம் பெருகவேண்டுமென்ருல உள் நாட்டுக் கைத்தொழில விர்த்தியடைய வேண்டும்.

9. அந்தந்தப் பிரதேசஙகளின் தேவைக்குத்

தக்கபடியும், கையிலிருக்கும் பணத்துக்கு தக்கபடியும் சாமான்கள் வரவழைத்து வியாபாரஞ்செய்ய வேண்டுமேயொழிய கடன் வாங்கி வியாபாரம் செய்வதினால் நஷ்டமே.

11. அயல்நாட்டு சாமான்கள் தேசத்தில் தாண்டவமாடுவதை நிறுத்த வேண்டுமானல், இந்திய நாட்டின் கைத்தொழிலை விர்த்தி செய்வது ஒவ்வொருவரின் கடமை.

12. அது விஷயமாக தனவந்தர்கள், சிறந்த தேசாபிமானிகளாக விளங்கி பற்பல தொழிற்சாலைகளை உண்டாக்கவேண்டும். நம்நாட்டு ஜனங்களின் தேவைக்குத் தகுந்தபடி சாமான்கள செய்ய முன் வரவேண்டும்.

13. பொது மக்களின் நன்மையை உத்தேசித்து சரக்குகளை எவ்வளவு குறைவாகக் கொடுக்கக்கூடுமோ அவ்வவ்வு குறைவாகக் கொடுக்கப்பட வேணடும்.

14. அனுபோகமிருக்கும் வியாபாரத்தை அல்லது தொழிலை அஜாக்கிரதையை முன்னிட்டு வரும் சொற்ப நஷ்டத்தினால் விட்டு விட்டு, அனுபோகமிலலாத வியாபாரததை நடத்த ஆரம்பிப்பது உசிதமல்ல.

15. அமெரிக்கா தேசமானது கைத்தொழில்

வியாபாரம் முதலியவைகளில் முன்னுக்கு வந்தது அவர்களின் சுயமுயற்சியும், சுயாதீன சிந்தையுமே தவிர வேறல்ல.

16. பொறுமை இல்லாதவன், சாதுரிய மில்லாதவன் வியாபாரியாயிருக்க முடியாது.

17. பொய் சொல்லுகிறவன், ஜனங்களின் சௌகரியத்தைக் கவனிக்காதவன், பணத்தை சீக்கிரம் கூட்டிவிட வேண்டுமென்று நினைப்பவன், அன்பில்லாதவன், வியாபாரியாக இருக்க முடியாது.

18. பணம் கைவராவிட்டாலும் முகமலர்ச்சியாய் இருப்பவனும், விலை குறைந்தாலும் ரொக்க விலைக்குக் கொடுப்பவனும் நல்ல வியாபாரியாய் இருப்பான்.

19. முதலாவது நம் நாட்டிற்கு வியாபாரிகளாக வந்த ஆங்கிலர் நமதேசத்தை இப்பொழுது ஆளுகிறார்கள் இதிலிருந்தே இந்தியர்கள் எவ்வளவோ கற்றுக்கொள்ளலாம்.

12 முடிவு.

அருமையான இந்தியநாட்டு சிரோன்மணிகளே! இதுவரை ஒவ்வொரு அத்தியாயத்திலுமிருக்கும் குறிப்புகளை வாசித்து மனதில கிரஹித்திருப்பீர்களென்று நம்புகிறோம். இச்சிறு நூலில் காணப்படும் விஷயங்கள் யாவும், தேசமுன்னேற்றம், ஒற்றுமையைக் கொண்டுவர கல்வியே பிரதானமென்று காட்டவே தவிர வேறல்ல. அது நாட்டில் சரிவர அவதரித்து விட்டால் அடிமைநாடு விடுதலையை தானகவே பெற்று விடுமென்பதில சந்தேகமில்லை. தன்னயச் செருக்கினாலும், யார் எப்படிப் போனாலென்ன. நாம் படித்து விடவேண்டும், நாம் சம்பாத்தியஞ்செய்து விடவேண்டும். நம்மைச்சேர்ந்த கிராமத்தாரோ, தேசத்தாரோ எப்படிப் போனாலென்னவென்று நினைத்து நிர்விசாரிகளாயிருப்பது தர்மமல்ல. சத்தியத்தை நாட்டில் நிலை நாட்டுவதைப் பற்றியும் பிரசாரங்கள் பல செய்வதைப்பற்றியும் எல்லாருக்கும் சந்தோஷமே, பகவான் பார்வையிலும் அதிக திருப்தியே அடிமைத்தனம் மூட பழக்க வழக்கங்கள் ஒழிவது நாட்டிற்கு நன்மையே.

ஆத்மீக தர்மத்தைக் கைக்கொண்டு ...

வொரு தேசாபிமானியும் நடக்கும் பட்சம் கூடிய சீக்கிரம் பலத்த காரியங்கள் நாட்டில் காணப்படும். அப்படிப்பட்ட காரியங்கள் 16ம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும், 18ம் நூற்றாண்டில் அமெரிக்கா தேசத்திலும் 19-ம் நூற்றாண்டில் ருஷியாவிலும், இத்தாலியாவிலும் இன்னும் அநேக தேசங்களிலும் நடைபெற்றிருக்கும் விபரங்களை சரித்திர பூர்வமாய் நாம் பார்க்கிறோம்.

முற்றிற்று.